# திராவிடநாடு



நாடகங்களுக்கு மட்டுந்தான் ஒத்திகைகள் பார்க்கிறோம் என்பதில்லை. நம்முடைய அமைச்சர்களும், பார்லிமெண்டுக்குப் போகுமுன் என்ன செய்யப் போகிறோம் என்பதை ஒவ்வொரு நாளும் ஒத்திகைப் டார்க்கிறார்கள் எனும் விஷயம் வெளியாகியிருக்கிறது. எம். சி. ஷா. எனும் ரெவினியு அமைச்சர், இன்ஷியூரன்ஸ் சம்மந்தமாக ஒரு அறிக்கையைப் படிக்க விரும்பினாராம் பார்லிமெண்டில். நேரமாகுமோ என்று அனந்தசயனம் ஐயங்கார் சந்தேகப்பட்டபோது, "எட்டு பக்கம்தான். ஐந்து நிமிடத்தில்படிக்கிறேன்" என்று அமைச்சர் கூற 'எப்படி முடியும்' என்று அவர் கேட்க, 'முடியும். காலையில் ஒருதடவை வீட்டில் ரிகர்சல் பார்த்துக்கொண்டேன்' என்று சொல்லிவிட்டு 5-நிமிடத்தில் முடித்தாராம்! எம்.பிக்களுக்குப் புரிந்திருக்குமா என்று கேட்காதீர்கள்!

✱

எஃகு தயாரிப்பதென்றால் பிரம்மாண்டமான உலைகள் தேவைப்படுகின்றன அல்லவா? இந்த உலைகள் இல்லாமலே, எஃகு தயாரிக்கும் வழியை இப்போது பிரிட்டிஷ் விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனராம். இந்த முறைக்கு "சைக்ளோஸ்டீல்" எனப் பெயராம். ஆராய்ச்சி நிலையிலிருக்கும் இம்முறை அமுலுக்கு வர இன்னும் சில ஆண்டுகளாகக்கூடுமென்று தெரிகிறது.

✱

மேற்கு வங்க கவர்னராகயிருந்து சில திங்களுக்கு முன்பு காலஞ் சென்ற டாக்டர் எச். சி. முகர்ஜி தனக்குச் சொந்தமானதும், பரம்பரை பாத்யதையுடையதுமான கட்டிடங்களையும் சொத்துக்களையும் கல்கத்தா பல்கலைக் கழகத்துக்கு இனமாக வழங்கிவிட்டாராம். அகப்பட்டதைச் சுருட்டும் பெரிய மனுஷர்கள் வளரும் இக்காலத்தில் இவருடைய செயல் ஆச்சரியத்தைத்தானே தருகிறது. நம்ம கவர்னர் என்ன செய்றாராம் ஆண்டு தோறும் வாங்கும் பத்து இலட்ச ரூபாய்களை

# கேட்டீரா! சேதி!

என்று கேட்கிறீர்களா! காமராஜ் வந்தால கேளுங்கள்.

✱

மிராசுதாரர்களில் பலர் பணம் கொடுத்து (சேரிந்தை என தஞ்சை மாவட்டத்தில் பெயர்) ஆதிதிராவிடர்களை நிரந்தர அடிமையாக்குகிறார்களல்லவா? இதுபோன்ற அடிமைகள் முறையையும், குழந்தைகளை வேலைக்கு வைத்துக்கொளவதையும், பெண்களை வாங்கி விற்பது போன்ற ஏற்பாடுகளையும், உலகிலிருந்தே ஒழிக்க வேண்டுமெனக் கோரும் தீர்மானமொன்று செப். 7-ந் தேதி ஐ. நா. சபையின் குழுவொன்றில் நிறைவேற்றப்பட்டுள்ளது. இத்தீர்மானத்தில் 31-நாடுகள் கையெழுத்திட்டுள்ளன. இந்தியா,பாகிஸ்தான், பிரான்ஸ், ரஷ்யா, உக்ரேன், பிரிட்டன முதலியவைகள் குறிப்பிடக்கூடிய நாடுகள்.

✱

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் இந்தியாவில் டெலிவிஷன் முறையைக் கொண்டு வரும் யோசனையும் உள்ளதாம். அது நிறைவேற்றப்படுமானால் மேற்படி நிலையம் பம்பாய் அல்லது டில்லியில் தான் அமைக்கப்படும் என்று டில்லி அமைச்சர் கேஸ்கர் ஆக. 20-ல் பார்லிமெண்டில் தெரிவித்துள்ளார்!

✱

தொழிலாளர்கள் இயன்ற வரையில் உழைக்க வேண்டும்! உழைக்க வேண்டும்! என்கிறாரல்லவா, நேரு. அதை அப்படியே கடைபபிடிக்கமுயன்றிருக்கிறார். முகம்மது அலி எனும் 30-வயதுகொண்ட தொழிலாளி ஒருவர். அவருடன் வேலை செய்யும் ஏனைய தொழிலாளிகளுக்கு அவர் அதிகமாக வேலை செய்வது பொறுக்கவில்லை. அதனால் அவரைக் கட்டிக் கொண்டுபோய வாய்க்கால் ஒன்றில் உருட்டிவிட்டார்களாம். இந்த 'ரசமான' சம்பவம் இலண்டனில் நடைபெற்றிருக்கிறது! அப்படி உருட்டிவிட்ட ஐந்து பிரிட்டிஷ் தொழிலாளிகளுக்கு நீதி மன்றம் செப். 8-ந் தேதி அபராதம் விதித்துள்ளது.

✱

அபினி கஞ்சா முதலியவைகளைக் கள்ளத்தனமாக வெளி இடங்களுக்குக் கொண்டுசெல்ல அமைச்சர்களே ஒத்துழைக்கிறார்களாம்! அவர்களுடைய கார்களில் இதுபோன்ற பொருள்கள் எடுத்துச்செல்லப்படுவதாக மத்ய பாரத் சட்டசபையில் உறுப்பினர்கள் கண்டித்தார்கள் ஆக. 28ந் தேதி.

✱

அமெரிக்காவிலுள்ள சில மாகாணங்களிலும் மதுவிலக்குச் சட்டம் இருந்து வருகிறது. இங்குபோல அங்கும் ஏராளமான கள்ளத் தயாரிப்பும் கடத்தலும் இருக்கிறதாம்! இது, போலீசாருக்குப் பெரிய தலைவலியாக இருக்கிறது என்றும் ஆண்டுக்கு 6000 பேர் தண்டிக்கபபட்டும் 3 851,185 டாலர் அபராதம் வசூலிக்கப்பட்டும் குற்றங்கள் குறையும் அறிகுறி தெரியவில்லையெனறு உள்நாட்டு ரெவினியு கமிஷனர் ஹாரிங்டன் தெரிவித்துள்ளார்.

✱

ஆளில்லாமலே 'ரேடியோ' மூலம் ஓட்டப்படும் ஆகாய விமானங்கள் இருக்கின்றனவல்லவா! இவைகளில் ஒன்று கடந்த வாரம், பறக்கவிடப்பட்டபோது, ஏதோ இயந்திரக் கோளாறால் தன்னிச்சைப்படி பறக்கலாயிற்றாம் அதை துரத்திக்கொண்டு போய் சுட்டு வீழ்த்தும்படி அமெரிக்க சர்க்கார் கட்டளையிட வேண்டியதாயிற்று. அப்படியும் இயலவில்லையாம். கடைசியில் அவ்விமானம் தானகவே ஓரிடத்தில் மோதி சுக்கு நூறாயிற்றாம்.

★

# ★ எட்டாவது ஆண்டு

மலர் 15 ] ஆண்டுச் சந்தா ரூ. 7 [ 16-9-56 ] தனிப் பிரதி 2 அணு [ இதழ் 11

எட்டாவது ஆண்டு முகிழ்க்கிறது நமது திராவிட முன்னேற்றக் கழகத்துக்கு.

பூரிப்பும் புளகாங்கிதமும் அடைகிறோம். நாம் — நாடெங்கும் பிரிவினை நாள் கொண்டாடுக; என்று பொதுச்செயலாளர் அறிக்கை விடுத்துள்ளார். விழாவும், களிப்பும், வீரமுழக்கமும் கேட்கும் நாடெங்கும்.

இந்த இன்பநாளிலே, நாம் அடையும் ஆனந்தமெல்லாம் கண்ணீருடன் பிறந்த நமது கழகம் இந்த ஏழாண்டுக் காலத்திலே சாதித்துள்ள சாதனைகளை நினைத்துத்தான். வானத்தை வில்லாக வளைத்து விட்டோம்; மணலைக் கயிறாகத் திரித்துவிட்டோம்; எடுத்த கொள்கைக்கு வெற்றி குவித்துவிட்டோம், என்று கர்வத்துடன் கர்ச்சனையிடவில்லை, நாம். ஆனால், எந்த கொள்கைக்காக இந்நாட்டில் திராவிடரியக்கம் அரும்பிற்றோ அந்தக் கொள்கைக்குக் குந்தகம் ஏற்படாமலும், அது நாடெங்கும் பாவி நல்விழிப்பை உண்டு பண்ணும் வகையிலும், நாம் பணியாற்றி வருகிறோம்—அந்தப் பணி பலனும் தந்து வருகிறது — நாள்தோறும் நாள்தோறும் நமது இலட்சியபுரிப் பயணம் நெருங்கிக்கொண்டே வருகிறது என்பதனை மட்டும், அடக்கத்தோடு தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

திராவிடத்துக்கு விடுதலை வேண்டும். வடக்கு நம்மை வஞ்சிக்கிறது—என்கிற கூற்று, கேலிக்குரியதாகக் கருதப்பட்ட நாட்கள், மங்கி வருகின்றன. கவர்னராகயிருந்தவர், கதறுகிறார். கம்யூனிஸ்ட்கட்சி பார்லிமெண்டு உறுப்பினரான புன்னூஸ் என்பார் இதே கிழமை டில்லி சபையில், "தென்னாட்டை, அங்குள்ள எமது கேரளத்தை, வடக்கு வஞ்சிக்கிறது" என்று முழக்கமிடுகிறார். காங்கிரஸ் வட்டாரத்திலேயே இத்தீ, பற்றிக்கொண்டு வருகிறது. இதனை முதலமைச்சர் காமராசரே சென்னையில் துவக்கப்பட்ட ஒரு ஏட்டின் ஆரம்பவிழாவில் உணர்ந்து பேசியிருக்கிறார், "காங்கிரசில் முன்போல இளைஞர்களுக்குப் பற்று இல்லை" என்பதாக. எப்படி இருக்கும் பற்று? காங்கிரஸ் அஸ்தமனபுரியை நோக்கிச் சென்றுகொண்டிருக்கும் ஒரு இயக்கம். அது தப்பித் தவறி வாழவேண்டுமேயானால், வடநாடுதான் தகுதியானதே தவிர, தெற்கு இனி ஏற்காது. 'தெற்கு' என நாம் குறிப்பிடுவது, மக்களையும், மாணவர்களையும் தொழிலாளர் அணிவகுப்புகளையுமே தவிர சீமான்களையும் மிட்டாமிராசுகளையும் அல்ல.

தி. மு. க. ஒரு உதயசூரியன். தன்னுடைய பிறந்த மண்ணுக்காக, மொழிக்காக, மக்களுக்காகப் பாடுபடும் கழகம—அதனால்தான். இந்த ஏழு ஆண்டுக்காலத்தில் எண்ணற்ற இளைஞர்களையும், மகத்தானதோர் சக்தியையும் பெற்றிருக்கிறோம்.

இதற்கு வலிவூட்டவும், கொள்கையினை நாடெங்கும் பரப்பிடும் வாய்ப்பாகவும் கருதியே, பொதுத் தேர்தலிலும் பங்கேற்கப்போகிறோம்,

ஏழைகள், இல்லாததுகள் நிரம்பிய நாம் வளர்ந்திடும் அளவினை பிறரைவிட காமராஜர் உணருவதாலேயே மேற்படி கூட்டத்தில் கூறியிருக்கிறார், "கம்யூனிஸ்டுகளைவிட ஆபத்தானவர்கள் இந்த கழகத்துக்காரர்கள்" என்று.

கம்யூனிஸ்டுகளைவிட ஆபத்தானவர்களாம்' நாம்.

ஆபத்து ஏற்படும் என்று அவர் எச்சரிப்பது. தனது கட்சியை, தனது சர்க்காரை. கம்யூனிஸ்டுகள் மட்டுமே கட்டுக்கோப்புடையவர்கள — இந்த இயக்கம் என்ன செய்யும்—என்று கருதியிருக்கிறார், காமராஜர், இதுநாள் வரை. இன்று தி. மு. க.வைப் பார்க்கிறபோது அவருக்குக் கிலியும் பயமும் பிறக்கிறது.

மிகப் பெரிய கட்சிக்காரர். அவரே மிரளுமளவுக்கு நாம் வளர்ந்திருக்கிறோம் என்பது உண்மையில் ஆனந்தத்தையே அளிக்கிறது.

இந்த வளர்ச்சியைக் கண்டு, அதே போதையில் மாழ்ந்தி மனமயங்கிடுபவர்கள் அல்ல நம்மவர்கள். வளர்ச்சியைக் கண்டு வாய்வலிக்கப் பேசியும் எழுதியும் வரும் 'முற்போக்கு முன்னணிகள்' விடும் பெருமூச்சு, நமக்குத் தெரிகிறது. அதன் விளைவாக, சக்தியெலாம் திரட்டி நம்மை ஏசவும் தாக்கவும் முற்படுகின்றனர். அவர்கள் எல்லாம் நமது அனுதாபத்துக் குரியவர்கள். இன்றில்லாவிட்டாலும் ஒரு நாள், நம்முடன் வாழப்போகிறவர்கள். அத்தகையவர்கள், நம்மைவிட, நாட்டின் நலனில் அக்கரை கொள்ளும்படிச் செய்யவேண்டும். அந்த அக்கரை அரும்பிடின், நிச்சயம் அவர்கள் நமது பக்கமே இருப்பார்கள்.

கண்ணியம் — கட்டுப்பாடு — கடமை எனும் முச்சொல்லையும் அரசியல் அகராதியில் ஏற்றிவிட்ட நமது கழகக் கண்மணிகளுக்கு, நாம் தெரிவிக்க என்ன இருக்கிறது? நாட்டின் நாடிகளல்லவா அவர்கள்.

இதயத் தூய்மையுடன் ஒரு இலட்சியத்தைத் தொட்டோம்—வியர்வையையும் இரத்தத்தையும் சிந்தி வளர்க்கிறோம் — அதன் வளர்ச்சி, மாற்றாரால் சிந்திக்கப்படும் அளவுக்கு வந்திருக்கிறது. நிச்சயம் வெற்றிபெறுவோம், என்கிற உறுதியுடன் ஒவ்வொருவரும் நமது பிறந்த மண்ணுக்காக நம்மாலான எல்லாக் காரியங்களையும் செய்வோமாக.

நம் கடன் பணி செய்வதே.

★

காஞ்சீபுரம்

16–9–'56

தம்பி !

ஆனல்.... ஆகவே.... எளிதாகப் பொருள் விளங்கி விடுகிறது என்று எவரும் கருதிக்கொண்டுள்ளனர்; அன்றுட உரையாடலிலிருந்து பாராளுமன்றப் பேச்சு வரையில் மிகத் தாராளமாகப் பயன்படுத்துகின்றனர், இந்த இரு சொற்களை. ஆனல்......? பார்த்தாயா, தம்பி, நாலு வரி முடிவதற்குள் இந்த ஆனல் எனும் சொல் வந்து தொலைக்கிறது. ஆகவே இதிலிருந்து என்ன புரிகிறது?...... மீண்டும், பார், தம்பி, ஆனல் எனும் சொல்போலவே, ஆகவே என்ற சொல்லையும் அழைத்துக் கொண்டேன். அந்த அளவுக்கு, எவருடைய பேச்சிலும் எழுத்திலும், தோழமை கொண்டாடிக்கொண்டு, ஆனல், ஆகவே எனும் இந்த இரு சொற்களும் இடம்பெற்று விடுகின்றன.

பேச்சிலும் எழுத்திலும் தோழமை கொண்டாடி இடம் பெற்றுள்ள இந்த இரு சொற்களும், தம்பி, காண்பதற்கு மிக எளிதாகப் பொருள் தரத்தக்கன போல் இருக்கும். ஆனல், இந்தச் சொற்களிலே புதைந்து நிற்கும் பொருளை விளங்கிக் கொள்வது உண்மையில் எளிதல்ல.

அணு என்ற உடன், ஓஹோ! அணுவா? என்று எப்படி எவரும் மிகமிகச் சாதாரணமாகக் கூறிவிடுவதன் மூலம், அணு குறித்து அனைவரும் அறிந்துகொண்டுள்ளனர், அத்துணை எளிது, அதன் தன்மையை அறிதல் என்று எண்ணும்படிச் செய்துவிடுகிருர்களோ, அது போன்றே, இந்த ஆனல், ஆகவே எனும் இரு சொற்கள் குறித்தும், ஒரு போக்கு காட்டப்பட்டு வருகிறது.

அதுமட்டுமல்ல, இந்த ஆனல், ஆகவே எனும் இரு சொற்களையும், 'அசை'க்குப் பதிலாகப் பயன்படுத்துவோரும் நிரம்ப உள்ளனர்!

ஏதேது, அண்ணு! தமிழ் இலக்கணம் பேசுவது போன்ற போக்கு கொண்டு, தமிழ் ஆசிரியர்களின் 'ஓட்டுகளை'ப் பறிக்க முயலுகிருயா? என்று, தம்பி, நீ கேட்கமாட்டாய்—என்னிடமும உன்னிடமும் கடுப்புள்ளவர் பேச்சல்லவா, அது.

நான், தமிழ் இலக்கணம் குறித்து அல்ல இதனை எழுதுவது—எனது இரு தமிழ்ப் பேராசிரியர்களும்—மணி. திருநாவுக்கரசு, மோதூர். கந்தசாமியார், இருவரும் வெகு பாடுபட்டனர், எனக்கு இலக்கணம் கற்பிக்க, நான் தமிழின் இனிமை பற்றி மட்டுமே அறிந்துகொள்ள முடிந்தது, இலக்கணப் பயிற்சியில் என்னை வெற்றிபெறச் செய்வதிலே, எனது இரு ஆசிரியர்களும் வெற்றிபெறவில்லை. ஆகவே...... பார், பார், தம்பி! மீண்டும் அந்த ஆகவே வந்து ஒட்டிக்கொள்கிறது! அடா, அடா, இந்த இரு சொற்களும், பொதுவாழ்வுத் துறையினரின் நாவிலே இருந்துகொண்டு, அவர்களையும் அவர்களிடம் தொடர்புகொண்ட பொது மக்களையும், படுத்தும் பாடு இருக்கிறதே, தம்பி, சொல்லுந்தரத்ததல்ல.

## ★ ஆனல்.... ஆகவே....!

ஒரு பிரச்சினையை விளக்கிக் கொண்டே போகிருர் ஒரு தலைவர் என்று வைத்துக்கொள்—ஏன் வைத்துக்கொள் என்று தயவாகக் கேட்டுக்கொள்கிறேன் என்ருல், இப்போதெல்லாம் பிரச்சினைகள் விளக்கப்படுவதில்லை, புகுத்தப்படுகின்றன, புதிராக்கப்படுகின்றன! எல்லாத் தலைவர்களுமா அவ்விதம் என்ருல், தம்பி, பெரும்பாலோர் இம் முறையைத்தான் கையாள்கிருர்கள் — வேறு சிலர், நல்ல விளக்கம் தருகிருர்கள் ஆனல் பிரச்சினைகளுக்கு அல்ல— இந்த நிலைமை இருப்பதனுல்தான் பிரச்சினையை விளக்குவதாகவைத்துக்கொள் என்று தயவு கோரும் தன்மையில் கேட்டுக்கொண்டேன் — இனிக் கேள், பிரச்சினையை விளக்கியானதும், ஆனல், அல்லது ஆகவே எனும் இரு சொற்களும் துள்ளிக் குதித்துவந்து நிற்கின்றன — அந்தத் தலைவர், இந்த இரு சொற்களிலே, எதனைத் தன் பேச்சுக்கும், அதை அடுத்துத் தன் செயலுக்கும் துணையாகக் கொள்கிருரோ, அதைப் பொறுத்துத்தான், சமுதாயத்துக்குக் கிடைக்கும் பலன் இருக்கிறது. இதைச் சொல்லத்தான் நான் இலக்கண பாடம் போன்ற முறை துவக்கினேன் — இலக்கணம் போதிக்க அல்ல.

நமது நாட்டிலே, இந்த இரு சொற்களுக்கிடையே கடுமையான போட்டி—தலைவர்கள் திணறும்படியான நிலை ஏற்பட்டுவிடுகிறது— கடைசியில் அவர்கள், ஆனல் போடவேண்டிய கட்டத்தில்ஆகவேயையும், ஆகவே என்று கூறவேண்டிய கட்டத்தில் ஆனல் என்று கூறியும், பிரச்சினைகளைப் பாழடித்துவிடுவதைத்தான் பெரிதும் காண்கிருேம்.

நம் நாட்டிலேயே பல பிரச்சினைகளுக்கு, எத்துணையோ முயற்சிக்குப் பிறகும், தக்கதோர் பரிகாரம் கிடைக்காமற் போனதற்குக் காரணம், இந்த ஆனல், ஆகவே எனும் இரு சொற்களும், தலைக்குப் போடவேண்டியதைக் காலுக்கும் காலுக்குப் போடவேண்டியதைத் தலைக்கும் போட்டுக்கொள்ளும் அலங்கோலம்போலப் பயன்படுத்தப்பட்டுவிடுவதுதான் என்பதை, பல்வேறு அரசியல் சம்பவங்களையும் ஆய்ந்தறிந்தால் அறிந்துகொள்ளலாம்.

பொதுவாகக் கவனிக்கும்போது ஒரு உண்மை புலப்படும்; ஆனல்... என்றசொல், இழுப்பு, வழுக்கல், திகைபபு, திணறல், அச்சம், தயை, தாட்சணியம், போன்ற மனப்போக்கின் விளைவாக முளைப்பதையும், ஆகவே எனும் சொல், உறுதிப்பாடு செயல்படுதிறன், எழுச்சி, முயற்சி போன்ற போக்கிலே மலர்வதையும் உணரலாம், பெரிதும்.

எழுச்சி கொண்டோர்போல நடித்துவிட்டு, பிறகு வழுக்க விரும்புவோர், பிரச்சினைபற்றி பேசிக்கொண்டே வரும்போது; சரி சரி, பிரச்னையைக் காரசாரமும் வீரதீரமும் ததும்பும் வகையில் விளக்குகிருர் இந்தத் தலைவர், **ஆகவே இந்த அக்ரமத்தை ஒழிக்க வேண்டும்,** என்று முழக்கமிடப் போகிருர், செயல் திட்டம் தரப் போகிருர் என்று கேட்போர் ஆவலுடன் எதிர்பார்த்துக்கொண்டு இருப்பர், ஆகவே என்று சொல்வதற்குப் பதிலாக அந்த அருந்தலைவர் ஆனல் என்று இணைப்புப் போட்டு, இழுப்புப் பேச்சில் இறங்கி, வழுக்கி விழுந்து, தமது அச்சத்தையோ, அல்லது தமவு தாட்சணியத்துக்குக் கட்டுப்பட்டுவிட்ட தன்மையையோ காட்டிக் கொண்டுவிடுவார்.

இதோ ஓர் எடுத்துக்காட்டு—

> **"நமது திட்டம் சமதர்மம். சமதர்மம்தான் நீதியையும் நேர்மையையும்அடிப்படையாகக்கொண்டது.**
>
> **சமதர்ம திட்டத்தைத்தான் மக்களாட்சியின் மாண்பறிந்த நாடுகளெல்லாம் ஏற்றுக்கொண்டுள்ளன.**
>
> **பாரதமும் சமதர்ம திட்டத்தை ஆவடி காங்கிரசின்போதே, ஏற்றுக்கொண்டுவிட்டது."**

நேரு பண்டிதர், தமது ஆட்சியின் குறிக்கோள் யாது என்ற பிரச்சினையை இவ்விதம் விளக்குகிருர். மாம்பழத்தை, தோலைப் பதமாகச் சீவி எடுத்துவிட்டு, சிறுசிறு துண்டுகளாக நறுக்கிவைக்கிருர். மாம்பழத் துண்டு கிடைக்கப் போகிறது, சுவை பெறப் போகிருேம் என்றுதானே எவருக்கும் தோன்றும். கிடைக்கிறதா என்று பார், தம்பி.

பிரச்சினையை இந்த ஆர்வத்துடன் நேரு பண்டிதர் விளக்கிக் கொண்டு செல்வது கண்டு என்ன எண்ணிக்கொள்வோம்.

விளக்கத்தின் இறுதியில் ஆகவே என்று வீரச்சொல் தந்து,

> **ஆகவே இந்த நாட்டிலே தொழில்களை முதலாளிகளிடம் விட்டுவைக்கப் போவதில்லை கொள்ளை இலாபக்காரனை விட்டு வைக்கமாட்டோம்.**
>
> **உழைப்பவனை வாட்டி வதைத்து ஒரு சிலர் உல்லாச வாழ்வு நடத்துவதற்கு அனுமதிக்கமாட்டோம்.**

என்றெல்லாம் நேரு பேசப்போகிருர். ஆர்வம் கொந்தளிக்கும் வீரம் வீறிட்டெழும் என்றுதானே எண்ணிக்கொள்வோம். அவரோ, பிரச்சினையை விளக்குவதிலே விவேகம் காட்டிவிட்டு, இறுதியாக உறுதிப்பாட்டைக் குறித்திடும் கட்டம் வந்ததும், **ஆகவே** என்ற சொல்லை, மெல்லச் சிரமப்பட்டுத் தள்ளிவிட்டு, ஆனல் எனும் இழுப்புச் சொல்லினை இழுத்தணைத்தபடி

> **ஆனல் சமதர்மம் வெற்றி பெறுவதற்கு முதலாளிகளை ஒழித்தாக வேண்டும் என்பதில்லை.**
>
> **தொழில்கள் தனிப்பட்ட முதலாளியிடம் இருக்கக்கூடாது என்று சட்டம் போடத் தேவையில்லை.**
>
> **இலாபம் தேடுவோரைத் தடுக்கவேண்டும் என்பதில்லை.**

என்றெல்லாம் பேசுகிருர்.

திகைத்து நிற்கிருேம், திணறிப் போகிருேம், சமதர்ம திட்டமே, திக்குத்தெரியாத காட்டிலே விடப்பட்ட சிறகொடிந்த பறவை போலாகிவிடுகிறது.

தம்பி, இந்தக் கட்டத்தில் மட்டும் **ஆனால்** என்ற அவலச் சுவை **தரும்** சொல்லைக் கொள்ளாமல், **ஆகவே** என்ற சொல்லை இணைத்**துத் தம்** ஆற்றலைக் காட்டினால் **எத்துணை** நன்மை கிடைக்கும் **என்று எண்ணிப்** பார்க்கும்போது **ஏக்கம்** பிறக்கத்தான் செய்கிறது.

**சூயஸ் கால்வாய் எகிப்தின் உடைமை; அதனை நிர்வகிக்கும் உரிமையை எழுச்சி பெற்ற எகிப்து நிலைநாட்டிக்கொண்டு விட்டது**—என்ற இந்த விளக்கத்**தின்** தொடர்ச்சியாக, **ஆகவே, ஆனால்** எனும் இரு சொற்களில் **எது** பயன்படுத்தப்படுகிறதோ **அதைப்** பொறுத்**து**, இன்றைய உலகப் போக்கே இருப்பதனை **எண்ணிப்** பார்த்திடும்போ**து**, **ஆனால்—ஆகவே** எனும் இருசொற்களும் **வடி**வில் சிறியன, மகத்தான வலிவுடையன என்பதை அறிந்து கொள்ளலாம்.

சூயஸ்வரையிலே செல்வானேன், **தம்பி**, நமது குடும்ப விவகாரம் போதுமே. பெரியாரின் திருமணப் பிரச்சினை கிளம்பியபோது **ஆனால்** போட்டவர்கள் ஒரு சிலர், **ஆகவே** போட்டவர்கள் ஒரு சாரார் — திராவிடர் கழகம், திராவிட முன்னேற்றக் கழகம் எனும் இரு வடிவமே அல்லவா ஏற்பட்டுவிட்டன!

**தம்பி**, சாமான்யமான சொற்களல்ல, இந்த, **ஆனால் ஆகவே**— என்பவைகள். மிகப் பொல்லா**தன!!**

தேவிகுளம் பீர்மேடு பிரச்சினையின்போ**து**, அவை தமிழருக்கு உரியன என்பதற்கான காரணங்களை, வரலாற்று ஆதாரங்கள், **புள்ளி விவரங்கள்** ஆகியவற்றினைத் **துணை**கொண்டு நிதியமைச்சர் சுப்பிரமணியம் நேர்த்தியாகப் பேசினார், சட்டசபையில் — தேவிகுளம் இழந்தோம் — காரணம் என்ன? — இவ்வளவு பேசியவர், **ஆகவே** என்று ஆர்த்தெழவில்லை, **ஆனால்** என்று ஆமையானார், சிறிது நாட்களிலே, அந்தப் பிரச்சினையைப் பொறுத்தமட்டில் ஊமையுமானார்.

**ஆகவே** என்ற சொல் கொலுவிருக்கவேண்டிய கட்டத்தில், **ஆனால்** எனும் சொல் குடிபுகுந்தது, காடும் மலையும் கவினுற விளங்கிடும் தேவிகுளம் பீர்மேடு, நெய்யாற்றங்கரை போன்ற இடங்களை இழந்தோம்.

**ஆகவே** என்ற சொல்லினை அமைச்சர், அரியாசனத்தில் அமர்த்தியிருந்தால், தேவிகுளம் ஆகிய பகுதிகள் தமிழர்க்குக் கிடைத்திருக்கும்— அமைச்சர்பதவி ஒருக்கால் அவருக்கு இல்லாது போயிருக்கும்!

தமிழர் வாழும் இடம் இது— தமிழரின் தாயகம்—**ஆகவே** தமிழ்நாடு **என்றே** பெயர் அமைதல்வேண்டும் என்று பெரியாரே கூறினார், அவருடைய பேரன்பைப் பெற்றுப் பெருமிதம் கொண்டுள்ள காமராஜரோ, ஆகவே இதற்குத் தமிழ்நாடு என்றுபெயரிடலே பொருத்தமுடைத்து என்று கூறாமல், ஆனால், உலகில் சென்னை என்றால் தான் புரியும், சென்னை ராஜ்யம் என்றே பெயர் இருக்கும் என்று அறிவித்துவிட்டார். தமிழருக்குத் 'தமிழ்நாடு' என்ற பெயர் அணியும் வாய்ப்பு கிடைக்கவில்லை.

**ஆகவே இப்படிப்பட்டவரின் ஆட்சியை ஆதரிப்பது அறமாகாது என்றல்லவா தம்பி! நீ கூறுகிறாய். தமிழ்நாடு என்ற பெயர்கூட வைக்கத்தான் காமராஜர் முன்வரவில்லை, ஆனால் அவர் நல்லவர், நம்மவர், தமிழர், அவர்தான் மீண்டும், மீண்டும், மீண்டும் ஆட்சி செய்யவேண்டும் என்றல்லவா பெரியார் சொல்கிறார்.**

இதன்பயனாக அரசியல் நிலைமையும், போக்கும், எவ்வளவு எதிர்பாராதமுறையில் உருவாகிவிட்டது, உணருகிறாயல்லவா?

பொதுமக்கள் பேசுவதை சற்று உற்றுக் கேட்போம், வா, தம்பி,

> பெரியார், தமிழ்நாடு என்று தான் பெயர் இருக்கவேண்டும் என்கிறார்.
>
> ஆர்வத்தோடு சொல்கிறார்; எழுச்சியூட்டும் முறையில் எடுத்துரைக்கிறார்.
>
> இந்தப் பெயர் கிடைப்பதற்காகப் பெரும்போரே நடத்துவேன் என்று எச்சரித்திருக்கிறார்.
>
> காமராஜரோ, அதெல்லாம் அர்த்தமில்லாத பேச்சு, அனுவசியமான ரகளை, வீண் குழப்பம், சென்னை ராஜ்யம் என்ற பெயர்தான் இருக்கும். ஆமாம், யார் வேண்டுமானாலும் என்ன வேண்டுமானாலும் கூச்சல் போடட்டும் என்று பிடிவாதமாகப் பேசுகிறார்.
>
> **ஆகவே** பெரியார், காமராஜரின் இந்தக் குருட்டுப் போக்கை வன்மையாக எதிர்த்துப் போராடக் கிளம்புவார்—

இப்படித்தானே பொதுமக்கள்— பெரியார், தமிழ்நாடு என்ற பெயர் தேவை என்பதற்கான விளக்கமளித்தபோது பேசிக்கொண்டனர். பிறகோ, காமராஜர், தமிழ்நாடு என்ற பெயர் சூட்டக்கூட ஒப்பாதது கண்டு, பரணி பாடினாரோ என்றால், இல்லை.

**ஆனாலும் காமராஜரை ஆதரிக்கிறார்! ஏன்? ஏன்?**

என்று பொதுமக்கள் கேட்கின்றனர்.

இவ்வண்ணம், தம்பி, ஒவ்வோர் பிரச்சினையிலும், இந்த ஆனால், ஆகவே எனும் சொற்கள், வண்ணத்தை, வடிவத்தை, வலிவை, விளைவை, நிலையை, நோக்கை, மாற்றிவிடக் காண்பாய். ஒவ்வொன்றாகவும், ஒவ்வோர் முனையில் நின்றும் எண்ணிப்பார்த்தால், முழுவதையும் காண்பாய்— இல்லையேல், குருடர் கண்ட யானைக் கதையாக முடியும்.

> **என்னோடு இருந்தார்கள். என்றால் ஆளானார்கள், என் திருமணத்தின்போது விட்டுப் பிரிந்தார்கள், தனிக் கட்சியானார்கள்.**

என்ற பேச்சுடன், பெரியார் **ஆனால்**

> திராவிடநாடு பிரச்சினை
>
> பொருளாதாரத் திட்டம்
>
> சமுதாயப் பிரச்சினை

ஆகியவற்றிலே, முன்பு கொண்டிருந்த கருத்தினையே கொண்டு இருக்கிறார்கள்.

(15-ம் பக்கம் பார்க்க)

# அடுக்குமா ஐயா!

ஒன்பது பேர்!

அவர்களை அழைத்துச் செல்ல ஊரிலிருந்த போலீஸ் போதவில்லை; ஆயுதம் தாங்கிய துருப்புகள் ஓடிவந்தன.

அவ்வளவு பெரிய பயங்கரவாதிகளோ, அட்டகாசம் செய்வதில் சூராதி சூரர்களோ, ஆள் வெட்டிகளோ, அக்கிரமக்காரர்களோ என்று எண்ணத்தோன்றும். இந்த ஒன்பது பேரும், அப்படிப்பட்டவர்கள் அல்ல; இரும்புக் குணமும், எத்திப் பிழைக்கும் சுபாவமும் அறியாத வயதினர்; அரும்பு, மான் குட்டி, மலர் இனம் என்று வர்ணிக்கும் வயதுகொண்ட பச்சிளம் பாலகர்கள்!!

அந்தப் பாலகர்களை போலீசும் இராணுவமும் அழைத்துச் சென்றது எங்கு தெரியுமா? பள்ளிக்கூடத்துக்கு!!

"பள்ளிக்கூடத்துக்கு அழைத்துச் செல்ல ஆயுதம் தாங்கிய இராணுவமா? ஏன்! ஒரு வேளை பெரிய சீமான் வீட்டுச் செல்லப் பிள்ளைகளோ. இப்படி மிரட்டினால் தான் பள்ளிக்கூடம் போவார்கள் என்று கருதி அவர்தம் தந்தை செய்த தந்திரமோ?", என்று எண்ணத் தோன்றும்.

அல்ல தோழர்காள் அல்ல! அந்த ஒன்பது பேரும் செல்வபுரியினர் வீட்டுச் சிலைகள் அல்ல; ஏழைக் குடிசைகளைச் சேர்ந்தவர்கள்! கல்வி எனும் ஒளி எமக்குக் கிட்டுமா, கிட்டுமா என்று காத்திருப்பவர்கள்.

எனினும், ஏன் இராணுவமும் போலீசும் தேவைப்பட்டது? அது தான் வேதனைக்குரிய விபரீதம்! படையும் போலீசும் அந்த ஒன்பது குழந்தைகளின் பாதுகாப்புக்காகவே வந்தன. அவை வராவிடில், அந்தச் சிறுவர்களை, ஊரார் பள்ளிக்குள் நுழையவிடார்! போகும் வழியில் பிணமாக ஆக்கிவிடக்கூடும்!! அந்த ஒன்பது பேரும் பள்ளிக்கூடத்துக்குப் போகக் கூடாதென்பது ஊரார் வாதம். அவர்கள் நீக்ரோக் குழந்தைகளாம்! அதனால் போகக்கூடாதாம்!!

இராணுவம் இருமருங்கும் நீட்டிய துப்பாக்கிகளுடன சூழ்ந்து செல்ல நடுவில் அந்த ஒன்பது கருப்புக் குழந்தைகளும் செல்லும் போதும், விடவில்லையாம் அமெரிக்காவிலுள்ள கென்டக்கி எனுமிடத்திலுள்ள மக்கள்.

அந்தக் குழந்தைகளை நோக்கி அழுகிய முட்டைகள் பறந்தன! ஆகா, ஊகூ என்று கேலிக்குரல் எழுப்பினர்! கழுதைகளா-கண்றாவிகளா—ஏ, கருப்புகளா — என்று வாயில் வந்தபடியெல்லாம் தாக்கினர்!!

**இராணுவத்தையும் மீறி குழந்தைகள் மீது பாய்ந்தனராம், ஒரு இடத்தில்.**

'இந்து' கூறுகிறது இச்செய்தியை! ஏன்? ஒரு குட்டித் தலையங்கமே தீட்டிக் கொடுமையினைச் சித்தரிக்கிறது.

அறிவாலயம் செல்லத் தடை போடுகிறது ஜாதிகவெறி!

* * *

"தேவாலயம் செல்லலாம் தேவ தேவனைத் தரிசிக்கலாம்" என்று திருவையாற்றுக்கருகிலுள்ள வரகூர் வாழ் மக்களை எண்ணினர்.

கதவு சாத்தப்பட்டது! தேவாலயம் செல்லத் தடைவிதிக்கப்பட்டது, அவர்களுக்கு!

சென்ற கிழமை நடைபெற்ற இந்தச் செய்தியைக் கண்டிருக்கக் கூடும் நீங்கள்.

சின்னஞ்சிறு ஊர்தான்! எனினும் அங்குள்ள பார்ப்பன குலத்தவர்—பார்ப்பனரல்லாதார், கோயிலுக்குள் நுழைவது அடாது கூடாது என்று தடுத்தனர்.

ஆண்டவன் ஆலயத்துக்குள் நுழையவா தடை? அதிசயமாயிருக்கிறதே, அமெரிக்க வெறியையும் மிஞ்சிவிட்டதே, என்று கருதலாம்.

ஆமாம் தோழர்கள் ஆமாம்! ஜாதி வெறி தொலைந்து வருகிறது—சமரச ஞானம் உதயமாகி வருகிறது—உயர்ந்தவன் தாழ்ந்தவனில்லை — ஆனாலும் அரைத்த மாவையே அரைக்கிறார்கள் இந்த திராவிட இயக்கத்தினர், என்று நமக்கு ஆலோசனை கூறுவோர் ஏராளம்.

அவர்களுக்கு 'வரகூர்' பதில் தருகிறது! வாழும் ஆண்டவன் பெயர் வெங்கடேசப் பெருமாளாம் — அவரது திருக்கோயில் பிரம்ம குலத்தினராகிய எங்களுக்கே சொந்தம் — இங்கே நீங்கள் வரக் கூடாது எனத் தடுத்தனராம் பார்ப்பனர்கள்.

வியப்பும் வேதனையும் அரும்பக் கூடிய நிகழ்ச்சிதான்! அதற்குள் பொதிந்துகிடக்கும் வெறியின் அளவினையே உற்று நோக்க வேண்டுகிறோம்!

உழைத்து உழைத்து உடல் தேய வாழும் திராவிட மகன், திண்தயாளன்—அனுதாபச்சகன்

— ஆபத்பாந்தவன் — அண்டமெலாம் கட்டி ஆள்கிறவன் என்று வர்ணிக்கப்படும் ஆண்டவன் ஆலயத்துக்குள் செல்ல தடை விதிக்கப்பட்டிருக்கிருன்.

எந்த பேதம் செத்து வருகிறது என்று சிறிது நம்பிக்கை கொள்கிருேமோ அதற்குப் புத்துயிரூட்டிடப் புகுந்திருக்கிருர்கள் வரகூர் வாழ் பார்ப்பனர்கள்.

இந்த அடாத செய்தியைக் கேள்விப்பட்டு தஞ்சை கிளம்பியிருந்தால், வரகூர் தரைமட்டமாயிருக்கக்கூடும்! வரகூர் பிரம்மாக்கள வாயிலும் வயிற்றிலும் அடித்துக்கொண்டு ஓடத்தான் நேர்ந்திருக்கும்! சகிப்புக் குணமும் சாந்த புத்தியும் பெற்று வரும், தமிழ் மகன், அடாத செயல் எதிலும் ஈடுபடவில்லை. "அடுக்குமா ஐயா?" என்று கேட்டிருக்கிருன்—செயல் மூலம்.

அறவழியின் மூலம் அவர் தம் அக்கிரமத்தை உலகுக்கு உணர்த்தியதோடு, தமது உரிமையை நிலைநாட்டவும் முயன்றிருக்கின்றனர் பார்ப்பனரல்லாதவர்கள்.

அனுதினமும் அங்கே அறப்போர் நடைபெற்றிருக்கிறது! பத்து இருபது பேராகக் கோயிலுக்குள் நுழையக் கிளம்புவர்—பாதுகாப்புக்காக வந்த போலீஸ் படை தடுக்கும் — மீறுவர்—இதுபோல ஒவ்வொரு நாளும் நடந்திருக்கிறது.

**இந்த ஒரு காரியத்துக்காக அந்தச் சிற்றூரில் 125-பேர் கைது செய்யப்பட்டிருக்கிருர்கள்.**

'இந்து' பதறவில்லை, 'மித்திரன்' போதனை போதிக்க வரவில்லை, இந்து தர்மத்தைக் காப்பதற்காகவே உயிரோடிருக்கும் சங்கராச்சாரியார் துடிதுடிக்கவில்லை, சர்வேஸ்வரன் தூதராகத் தன்னைக் கருதிக்கொண்டிருக்கும் ஆச்சாரியார் கண்டிக்க முன்வரவில்லை, தத்தமது ஆட்களை அனுப்பி தம்மவருக்குப் புத்தி போதிக்கும் எந்த முயற்சியிலும் ஈடுபடவில்லை பிரம்மகுலத் தலைவர்கள்.

அடடா! இவர்கள், சில சமயங்களில் எப்படியெல்லாம் புத்தி போதிக்க வருகிருர்கள் நமக்கு. "அடுக்குமோ ஐயா! எங்கேயிருக்கிறது ஜாதி வெறி? பாஷ்யம் அய்யங்கார் அரிஜன முன்னேற்ற சங்கத்தில் இல்லையோ! எந்தப் பிராம்மணன் இந்தக்காலத்தில், தன்னை உயர்ந்தவன் என்று சொல்லிக் கொள்ளுகிருன். அதெல்லாம் பத்தாம்பசலிக் காலத்தில். இருந்தும் இந்தத் திராவிட இயக்கத்தினர் ஏன் இன்னும் பிராம்மண குலத்தவரை விடமாட்டேன் என்கிருர்கள்" என்று நமக்குப் புத்தி போதிக்கவரும் காங்கிரஸ் தலைவர்களும் உண்டு.

அவர்களை, வரகூரைக் கண்டீர்களா என்று கேட்க விரும்புகிருேம்!

அதுமட்டுமல்ல, வரகூரில், இந்த அநீதியை எதிர்த்து போர்க்கொடி ஏந்தியதே யார் தெரியுமா? நாமல்ல! காங்கிரஸ்காரர்கள்!

ஜில்லா காங்கிரஸ் கமிட்டிமெம்பர் ராமய்யா சோழகர், திருக்காட்டுப்பள்ளி பஞ்சாயத்துப் போர்டுத் தலைவர் கே. பிச்சையா மங்களார் ஆகியோர் தலைமை வகித்து நடத்தினராம் இந்த அறக் கிளர்ச்சியை. அந்த வட்டாரத்து காங்கிரஸ் கமிட்டியே உறுதுணையாக நின்றதாம்!

பார்ப்பனர்—பார்ப்பனரல்லாதார் தகராறு. இதில் நமக்கென்ன, என்று போய்விடவில்லை. காங்கிரஸ் நண்பர்கள். அக்கிரமம் என்று தெரிந்ததும் அதை எதிர்த்துப போர்க் கொடி ஏந்தியிருக்கிருர்கள்.

அவர்களை, மனமாரப் பாராட்டுகிருேம், நாம்.

அவர்களது நெஞ்சத் துணிவையும், அக்கிரமத்துக்கு அடிபணியாத போக்கினையும், வாழ்த்துகிருேம் நாம்.

* * *

'வரகூர்' சம்பவம் கண்டு பார்ப்பனத் தோழர்களில் சிலர் சங்கடம் அடைந்திருக்கக்கூடும்! "இந்தக் காலத்திலுமா, இப்படி...", என்று வேதனையடையும் நிலையிலிருப்போரும் உண்டு. மறுக்கவில்லை, நாம்.

ஆனல், அவர்கள் குலத்து தலைவர்களாக விளங்கும் பெரியவர்கள் ஏன் வரவில்லை இந்த அக்கிரமத்தைக் கண்டிக்க! ஏடுகளிலும், அறிக்கைகள் மூலமும் இந்தச் சம்பவத்தைத் தலையில் அடித்திருக்கலாமே-ஏன் செய்யவில்லை?

ஆபத்தின் விளைவை அறிந்ததாலோ அல்லது இது எங்கு கொண்டுபோய் விடுமோ என்கிற அச்சத்தாலோ வரகூரில் ஒருமாதிரியாக சமரசம் ஏற்பட்டுவிட்டதாம்.

ஆனல், நிலைமை இந்தளவுக்கு வளருமாறு செய்தது எது? பார்ப்பனர்களில் பலர் இன்னும், தமக்கும் மற்றவனுக்குமிடையே

## புத்தகம் என்ருல்!

புத்தகம் என்ருல் குறைந்தது ஆறு பென்ஸ் விலையாவது இருக்க வேண்டும்—இது 'பிரிட்டன்' தந்த பதில்.,

குறைந்தது நூறு பக்கங்களாவது இருக்கவேண்டும், அதையேபுத்தகம் எனக்கூறலாம்என்பது 'இத்தாலியும்''அயர்லாந்தும்' கொண்டகருத்து.

வேண்டாம்! வேண்டாம்!! குறைந்தது 54 பக்கங்களிருந்தால் போதும்; அதுதான் புத்தகம் என்பது 'அங்கேரி'யின் கருத்து.

60 பக்கங்கள் போதும் என்கிறது 'டென்மார்க்', புத்தகம் எது என்று நிர்ணயிக்க.

'ஆபிரிகா' 50 பக்கமே போதும் என்கிறது.

'கானடா' 49 பக்கங்கள்! 'செக்கோஸ்லோவேகியா' 32 பக்கங்கள்! 'ஐஸ்லாந்து' 17 பக்கம் கொண்டதெல்லாம் புத்தகம்தான் என்கிறது!!

இப்படி நாட்டுக்கு நாடு, பக்கத்தாலும் விலையாலும் புத்தகங்களை வரையறுக்கப்படுவதைக் கண்ட ஐ. நா. குழு "புத்தகம் என்ருல் 49 பக்கங்களுக்கு குறையாமல், பத்திரிகைகளைப் போல் இல்லாமலிருப்பதுதான்" என்று முடிவு கட்டியிருக்கிறது.

தாரதம்யம் உண்டு என்று கருதிக்கொண்டு, உயர்வு தாழ்வை உண்டு பண்ணும் 'ஆவணி அவிட்டங்களை' நடத்திக்கொண்டும், உயர்ந்தவன் என்று கருதிக்கொண்டுமிருப்பதுதானே.

இந்த உட்திமிர் அடங்காத வரையில், இதனை அடக்க முற்பட பார்ப்பன குலத் தலைவர்கள் முயற்சி எடுக்காத வரையில் சமரச ஒளி எப்படி முகிழ்க்கும்? எண்ணிப் பார்க்கவேண்டுகிறோம், பார்ப்பன குல இளைஞர்களை!! இருபதாம் நூற்றாண்டில், இப்படியொரு தகராறு? தேவாலயம் நுழையவா, பேதா பேதம்!!

அறிவாலயம் நுழையத் தடைவிதிக்கும் அமெரிக்காவுக்குப் புத்தி போதிக்கவரும்'இந்து'வுக்கு, இங்கே நடக்கும் அக்கிரமத்தைக் கண்டிக்க ஆசை வருவதில்லை.

இதனால் இங்கு நடப்பது, நீதிக்குரிய செயல் — சரியான காரியம் — என்று அந்தவட்டாரத்துப் பெரிய தலைவர்களும் கருதுகிறார்கள் என்றல்ல பொருள். அக்கிரமம் என்பது தெளிவாகத் தெரியும்—ஆயினும் மௌனம் சாதிக்கின்றனர்.

ஏன்?—அங்குதான் பொதிந்து கிடக்கிறது, பெரிய தலைவர்களின் போக்கு.

'லோகாசாரம் கெடக்கூடாது! மனுஷாள் அநாசார காரியங்களில் ஈடுபட ஆரம்பிச்சுட்டா. அதைத் தடுக்கவேணும்," என்று சொல்லி ஏடுகள் மூலம், விளம்பரங்கள்கூடப் போடுவதுண்டு, சங்கராச்சாரியார். ஆனால் இந்த விபரீத நிகழ்ச்சி கேட்டு மனந் துடிக்கவில்லை—ஒருதூது கிளம்பவில்லை.

மாறாக அக்கிரமத்துக்கு ஆளான மக்கள் மட்டுமே, எழுந்து நின்று போர்க்கொடி தூக்கி, போராடி வெற்றிகண்டிருக்கிறார்கள்.

இந்தச் சுபாவம், என்று மறைவது, எப்படி மறைவது என்பதனை பார்ப்பன குல இளைஞர்கள் ஊன்றிக் கவனிக்கவேண்டும். அவர்களிலே பலர், புது ஒளியின் பொருளை அறிவார்கள் நன்றாக! அவர்களையே கேட்கிறோம், "அடுக்குமா, நண்பர்காள்!" என்று. ★

# ஊர்வலம்

[ஞானக்கண் பேட்டி]

★

"சபாஷ்! சபாஷ்!!", என்று கூவிக்கொண்டே போய் நின்றேன், காமராஜரிடம்.

அவர் முகம் என்னைக் கண்டதும் ஏனோ, 'அமாவாசை'யைப் போலாயிற்று! வா, என்று கூடச் சொல்லாமல் பேசாதிருந்தார்! என்ன செய்வது என்று யோசித்த எனக்கு உடனே ஒரு யோசனை முளைத்தது.

"உங்களைப் பாராட்டுகிறேன். நீங்களே தீரர். தமிழ் மீது கொண்டிருக்கும் தளராத பற்று வளர்க! வாழ்க!", என்று கூவினேன்.

"கொண்டா, இரண்டு காப்பி!", என்று உத்தரவிட்டு விட்டு, என்னை உட்காரச் சொன்னார். "உங்களுக்கிருக்கிற தைரியம் யாருக்குமே வராது!", என்றேன். பதில் ஒன்றும் கூறவில்லை, "ஸ்வீட் கொண்டுவரச் சொல்லவா?" என்றார். "ஆகா!" என்று கூறிய எனக்கு ஏதாவது காரமும் சாப்பிட்டால் தேவலாம் போலிருந்தது. "எத்தனையோ பேர் மந்திரியாயிருக்காங்க. யாருக்காவது இந்தத் தைரியம் வருதா?" என்றேன். "ஸ்வீட் ஒண்ணு போதுமா! இன்னொண்ணு சாப்பிடுங்களேன். வேண்டாமா? அப்ப, அவசியம் காரம் ஏதாவது சாப்பிடுங்க!", என்று கட்டாயப்படுத்தினார். நானா விடுவேன்! ஸ்வீட்டும் காரமும் நீங்களும் நானும் கட்டும் வரிப்பணத்திலிருந்து வருவதுதானே? ஒரு பிடி பிடித்துவிட்டு தயாரானேன். காமராஜரும், நான் சொல்லுவதைக் கேட்க, ஆவலோடிருந்தார். "சட்டக் கல்லூரிக்குப் போய் பேசியபோது, தமிழிலேயே கோர்ட்டுக்கள் நடைபெறவேண்டும். வக்கீல்கள் எல்லாம் தமிழிலேயே பேசவேண்டும். தமிழிலேயே நடவடிக்கைகள் யாவும் நடக்கவேண்டும் என்று நீங்கள் பேசியதைப்பத்திரிகைகளில் படித்தேன். அதற்காகவே பாராட்ட வந்தேன்."

"பிறகென்னங்க ஞானக்கண்! சொராஜ்யம் வந்தும் தாய் பாஷைக்கு மதிப்பு வல்லேன்னா, அது என்ன சொராஜ்யங்க."

"ஆமாம்! ஆமாம்! மக்கள் மனமறிந்து நடப்பதற்குத்தான் சுதந்திரம் என்று பெயர். நீங்கள் சொன்னது ரொம்பச் சரி. ஆனால் ஒரு சந்தேகம்......?"

"இதிலே கூடவா சந்தேகம. ஏன் தமிழிலே சட்டத்தை நடத்த முடியாதுன்னு நினைக்கிறீங்களா?"

"வேண்டாம்! தமிழ் மணம் கமழவேண்டும் நாடெங்கும் என்று கூறும் நானா இயலாது என்பேன்? அது அல்ல என் சந்தேகம்..."

"பிறகு உங்க சந்தேகம்தான் என்ன?"

"கோர்ட்டுகளிலே எல்லாம் தமிழ் அரசோச்சவேண்டும் என்று கூறுகிறீர்கள் நீங்கள். மகிழ்கிறேன். ஆனால், குடும்பத்துக் கூடம்வரை இந்தி அரசோச்ச வருகிறதே! கார்டு கவர் காசுபணம் இப்படி இந்தி நுழைகிறதே. நயா பைசா வரப்போறதாமே ஐயா, நயாபைசா. அதைப்பற்றி என்னசொல்கிறீர்கள்" என்றேன். பதில் கூறவில்லை, அவர். முகம் மீண்டும் 'அமாவாசை' ஆகவே அங்கிருந்து கிளம்பினேன். மவுண்ட்ரோடு சர்க்கார் மாளிகைப் பக்கம் வரும்போது ஒரிஸா கவர்னராயிருந்த குமாரசாமி ராஜாவின் தலை தெரிந்தது. ஊருக்குப் போகும் வழியில் அங்கு தங்கியிருந்தார். அவரையும் பார்த்துவிட்டுப் போகலாம் என்று போனேன் என்னை கொஞ்சம் உற்றுப் பார்த்துவிட்டு, 'ஓகோ! நீயா?" என்றார்.

"என்ன அடையாளம் தெரியவில்லையா?" என்றேன்,

"நன்றாகத் தெரிகிறது! நான் கோயமுத்தூரில் பேசியதைப் படித்தாயா? என்றார்.

"படித்தேன். டில்லியே அலறுமளவுக்கல்லவா பேசிவிட்டீர்கள்"

"பார், பார் இன்னும் பல விஷயங்களைப் பிறகு சொல்லப்போகிறேன்.,'

என்று தன் சட்டைப்பையைத் தட்டிக் காட்டினுர்.

---

"டில்லிமீது திடீரென ஏன் உங்களுக்கு இவ்வளவு கோபம்?"

"ஏனு! நேருவைப் போய்க் கேள், அப்போது புரியும்..." என்ருர்.

'சரி' என்று டில்லிக்குப் பறந்தேன். பார்லிமெண்டு நடந்துகொண்டிருந்தது. பல தென்னுட்டு மெம்பர்கள், ஒரு தடவையாவது பார்லிமெண்டில் பேசவேண்டுமென்று முயன்றுகொண்டிருந்தார்கள். சான்ஸ்கிடைத்தால்தானே? காங்கிரஸ் எம். பி-க்களுக்கே கிடைக்கவில்லை. "என்ன காரணம்? என்று 'மெயில்' இதழ் நிருபரைக் கேட்டேன். "தெரியாதா சேதி உங்களுக்கு? தென்னுட்டு உறுப்பினர்கள் எவரைப் பேசச்சொன்னுலும் சரி, அவர்கள் காங்கிரஸ்காரர்களாயிருந்தாலும் இல்லாவிட்டாலும் எல்லோரும் "வடக்கு எங்களை ஏமாற்றிவிட்டது; தென்னுட்டைப் புறக்கணித்துவிட்டது" என்றே பேசுகிருர்களாம். அதனுல், இப்போது அவர்களை அதிகமாகப் பேசச் செய்வதில்லை..." என்ருர். அவரை விட்டுவிட்டு, நேருவின் அருகில்போனேன். சவூதி அரேபியாவுக்கு தான் செல்லப் போவதை முன்னிட்டு அங்கு செய்யப்பட்டுக்கொண்டிருக்கும் ஏற்பாடுகள் பற்றிய விபரத்தைப் படித்துக் கொண்டிருந்தார் — அவர். இடையிடையே புன்னகையும் அரும்பிற்று முகத்தில்.

"புன்னகையின் பொருள் எதுவோ?" என்றேன்.

"நீயா? எப்படி இங்கே பார்லிமெண்டுக்குள் நுழைந்தாய்? ஊம்... உன்னை யார் விட்டது" என்று கோபத்தோடு கேட்டார். பக்கத்திலிருந்த பண்டித பந்த்வேறு முறைத்தார்.

"கோபிக்காதீர்கள் இப்போது யாருடைய அனுமதியும் இன்றி நுழைந்தது தவறுதான். வருகிற பிப்ரவரிக்குப் பிறகு ஒரு எம். பி-யாக வருகிறேன்..." என்று கூறிவிட்டு ஒரே ஒரு விஷயம் தெரியவேண்டும் என்றேன்.

"என்ன?"

"ஏன், குமாரசாமி ராஜாவை அதற்குள் வீட்டுக்குப் போகும்படிச் செய்துவிட்டீர்கள்?"

"பத்திரிகைகளில் பார்த்திருக்கலாமே. அவருக்கு உடல்நலமில்லை. அதனுல்தான்......"

"இது அல்ல முக்கிய காரணம். வேறு ஏதோ இருக்கவேண்டும்" என்று நான் கூறவே, நேரு, பண்டித பந்தின் பக்கம் திரும்பினுர். அந்த பூதாகாரமான உருவைக் கண்ட எனக்கே அச்சமாயிருந்தது. ஆகவே அங்கிருந்து கிளம்பினேன்.

நேருவின் பிறந்த மாகாணமான ஐக்கிய மாகாணத்திலுள்ள இலக்குமணபுரியின் பக்கமாக நான் வந்துகொண்டிருந்தேன். ஊரெல்லாம் கருப்புக்கொடி மயமாக இருந்தது. கடைகள், வீடுகள் எல்லாம் சாத்தப்பட்டுக்கிடந்தன. என்ன காரணம் என்று இறங்கி விசாரித்தேன். ஒரு முஸ்லீம் தோழர், "முன்ஷியைப்போய்க் கேள்!", என்ருர் கோபத்துடன். முன்ஷிதானே இப்போது அந்த மாகாணத்து கவர்னர். மர மந்திரி என்று நம்மால் பட்டம் பெற்ற அந்த மனிதரைப் பார்க்கப்போனேன். ஏதோ யோசனையில் உலவிக்கொண்டிருந்தார். அவர் பக்கத்தில் ஆயிரம் ஆயிரமாக புத்தக 'பார்சல்'கள் கிடந்தன. என்னைக் கண்டதும், "நீ யார்?", என்ருர். விளக்கிவிட்டு, "ஏன் இலக்குமணபுரி முழுவதும் கருங்கோலத்துடன்காட்சி அளிக்கிறது", என்றேன்.

"ஏனு? எல்லாம் இதனுல் வந்த வினை!" என்று பிரிக்காமல் கிடந்த பார்சலைச் சுட்டிக் காட்டினுர். பார்சலைப் பிரித்து ஒரு புத்தகத்தைப் பார்த்தேன்! முன்ஷியின் தலைமையில் இந்துமதப் புனரமைப்புக்காகப் பல சீமான்கள் கூடி பம்பாயில் அமைத்திருக்கும் 'பாரதீய வித்யாபவன்' என்கிற நூல் வெளியீட்டுக் கம்பெனியார் வெளியிட்ட புத்தகம் அது. அதில், உலக மதங்களைப் பற்றி எழுதியிருந்தார்கள்.

"இதற்கும் கருப்புக்கொடிக்கும் என்ன சம்பந்தம் ஜீ?"

"ஊம்......" என்று கோபமாகப் பார்த்த அவர் "போய் இன்றைய பத்திரிகையைப் படி" என்ருர். அந்த நூலில், முஸ்லீம் மதத்தைப்பற்றியும் நபிநாயகம் குறித்தும் அவதூருக எழுதியிருக்கிறதென்றும், அதுகண்டு வடநாட்டு முஸ்லீம்கள் முன்ஷியாரைக் கண்டிக்கிருர்களென்றும் இதன் காரணமாக இலக்குமணபுரியில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் பலர் சாக நேர்ந்ததென்றும் கண்டேன், கண்களில் நீர் அரும்பிற்று.

★

அடுத்த இதழில்

சுழல் விழி மாது கிளப்பும் சூருவளியில்
கயல் விழிப் பாவை சிக்கி
வாழ்வில் இடர்ப்பட்டு
தணலில் தங்கமான காதை

★ **தணலில் தங்கம்** ★

**மா. கி. தசரதன்**

அளித்திடும்

எழிலோவியம், ஆரம்பமாகிறது.

முகப்பில்......

# எரிந்த முகம்!

**இது** ஒரு நாட்டின் பெயர். சூடானுக்கு கிழக்கே, கென்யாவுக்கு வடக்கே, ஆபிரிக்காவிலிருக்கிறது இந்த நாடு.

இதென்ன பெயர்?—எனக் கூடும் அழகு காண்பவர்கள்.

இந்தப் பெயரே இருக்க வேண்டும், இதுதான் எமது நாட்டின் புராதனப் பெயர், இதனை இழக்கமாட்டோம் என்கின்றனர் அந்நாட்டு மக்கள்.

அபிசீனியா—என்கிற பெயர் நன்றாகயிருக்கிறதே அது பலருக்குப் புரிந்த பெயராயிருக்கிறதே;என்று அவர்களைப் பார்த்துக் கேட்கப் பட்டதுண்டு. அது மாற்றார் (அராபியர்) வழங்கிய பெயர்; எனவே, அது தேவையில்லை என்று தமது பூமியை எதியோப்பியா என்றே அழைத்து வருகின்றனர். எதியோபியா என்கிற கிரேக்கச் சொல்லுக்கு 'எரிந்த முகம்' என்பது பொருளாம்.

எதியோபியா, இங்கிலாந்தை விட ஆறு மடங்கு பெரியது. கிட்டத்தட்ட இரண்டு கோடிக்கும் உள்ளாகவே மக்கள் இருக்கிறார்கள்! இங்கு வாழும் மக்களைவிட, மிருகங்களின் எண்ணிக்கை அதிகமாம்!

மூவாயிரம் ஆண்டுகளாக இருந்து வரும் இந்நாட்டிற்குப் புராதனப் பெருமைகள் பல உண்டு, ஆபிரிக்கக் கண்டத்தில், எழில்புரியாம் எகிப்துக்கு அடுத்தபடி சரிதச்சம்பவங்களைச் சந்தித்த பூமி, இது!

இந்த மூவாயிரம் ஆண்டுகளில்' இது யாருக்கும் அடிமைப்பட்டது கிடையாது—போர்த்துகீசியர் முயன்று தோற்றனர்—துருக்கியர்கள் ஆசைப்பட்டனர்; ஆனால் முடியவில்லை — பிரிட்டன் தன் தூதர்களை அனுப்பி 'ஆழம்'பார்த்தது; ஆயினும் அடிமைப்படுத்த இயலவில்லை.

காரணம், இந்நாடு அமைந்திருக்கும் சூழ்நிலையும், அந்நாட்டு மக்களுக்கிடையில் காணப்படும் வீரமும்தான்.

ஒருமுறை கென்யாவின் எல்லையிலிருந்த ஒரு 'பிரிட்டிஷ் சோல்ஜர்' எதியோபிய வீரன் ஒருவனிடம் சொன்னானும், "நண்பரே! நான் நேற்று இரவு முழுதும் தூங்கவில்லை. தங்கள் நாய் குரைத்துக் குரைத்துத் தொல்லைப்படுத்தியது, என்று. மறுநாள் காலை, அந்த நாயைப் பார்த்தான் பிரிட்டிஷ் வீரன்! அதன் காதுகளிரண்டும் அறுக்கப்பட்டிருந்தனவாம்! "என்ன நண்பரே, நாயின் காதுகளைக் காணோம்'; என்று பிரிட்டிஷ் வீரன் பரிதாபத்தோடு கேட்க, எதியோபிய வீரன், பதிலளித்தானும், "எத்தனை தடவை சொல்லுவது இந்த நாய்க்கு? விடாமல் குரைத்துக்கொண்டேயிருந்தது! சொல்லியும் கேளாத இந்த நாய்க்கு எதற்கு காதுகள் என்று அறுத்துவிட்டேன்!' என்பதாக.

கதையில் மட்டுமல்ல, வாழ்க்கையில்கூட, எதிர்ப்போரைப் பழி வாங்கச் சிறிதும் தயங்காராம் எதியோபியர்கள்! எதிரியிடம் சரணடைவதைவிட, மாள்வது மேல்என்பது இவர்களது சித்தாந்தம். புலியுடன் பொருது அதன் பற்களைக் கொண்டு வந்து தாலியாகக் கட்டினர் தமிழ் மறவர் என்கிறோமல்லவா நாம்! இது போல, எதியோபியர்களுக்கிடையும் ஒரு பழக்கமிருந்ததாம். மணமகன, மாற்றானை வென்று அவனுடைய உடலுறுப்பினைக் கொண்டு வந்து மணமகளிடம் காட்டிய பின்னரே மணவினை செய்யப்படுதல் வழக்கமாம்!

வீரச் செறிவுடன் வாழ்ந்த இவர்களை 1936-ல் படையெடுத்து வெற்றி கொண்டான் இத்தாலிய சர்வாதிகாரி முசோலினி. 1941-வரை அவன் வசமே, எதியோபியா அடிமைப்பட்டுக்கிடந்தது. எதியோப்பியச் சக்ரவர்த்தியான ஹெயில் சலாசர் அந்த ஐந்தாண்டுகளும், இங்கிலாந்துக்குத் தப்பியோடி வாழ்ந்தார்.

போரில் நேசநாடுகள் வெற்றி பெற்றதும் மீண்டும் நாட்டுக்கு வந்து மணிமுடி சூட்டிக்கொண்டார். அந்த மன்னரின் படமே, இதழின் முகப்பிலிருப்பதாகும்.

மணிமுடிதாரியான அவர் வைத்ததுதான் எதியோப்பியாவில் சட்டம்! இவர்,ஆண்டாண்டு காலமாக எதியோபியாவை ஆண்டு வரும் மன்னர் பரம்பரையைச்சேர்ந்தவர். இவரது மூதாதையர்கள் நாட்டின் முடிமன்னர்களாகயிருந்தவர்கள்! அவர் தம் காலத்தில், அரசனைக் காண மன்றத்துக்குச் செல்வதென்றால். தரையில் ஊர்ந்துதான் செல்லவேண்டுமாம். இப்போதுகூட, ஹெயில் சலாசரைப் பேட்டி காணச் சென்றால், அவரது அறையின் வாசலில் ஒரு தடவை குனிந்து வணங்கவேண்டும் — அறைக்குள் நுழைந்ததும் இன்னொரு முறை குனிந்து வணங்க வேண்டும்—எதிரில்போய் நின்றதும் இன்னொரு முறை வணங்க வேண்டும். அப்படியே விடைபெற்றுத்] திரும்பும்போதும் மும்முறை செய்யவேண்டும்.

ஹெயில் சலாசர், கிருத்துவ மதத்தைச் சார்ந்தவர்! எதியோபியாவிலிருப்போரில் பாதிப்பேர், கிருஸ்துவர்கள் — இன்னொரு பாதிப்பேர் இஸ்லாமியர்கள். எனவே இங்கு மசூதிகளும்உண்டு; மாதாகோவில்களும் உண்டு.

உலகத்திலிருக்கின்ற மன்னர் பரம்பரைகளிலேயே மிகமிகச் செல்வாக்கோடு இருப்பவர் இந்த மன்னர் என்று கூறுகிறார்கள். அதன் காரணமாகவே இவரை மன்னாதி மன்னர் என்றும் அழைக்கிறார்கள். நீண்டு வளர்ந்த காடுகளும், மிகப் பெரிய குன்றுகளும் நிறைந்த இங்கே, தனியாக ஒருவர் சென்று திரும்புவது இயலாதாம். ஆபிரிகாவையே இருண்ட கண்டம் என்று அழைப்பார்கள் — அதன் ஒரு மூலையிலிருக்கும் இதனை இருண்ட நாடு எனலாம். பக்கத்திலிருக்கும் சூடானுக்கும்

கென்யாவுக்கும் கூட இந்த நாட்டைப்பற்றிச் சரியாகத் தெரியாதாம்!

எதியோபியாவுக்குள் ஓரிடத்திலிருந்து இன்னோரிடத்துக்குச் செல்லவேண்டுமானால், விமானமூலம் தான் சாத்தியம் எனலாம். காடுகளும், கரடுமுரடான மேடுபள்ளங்களுமிருப்பதால் சரியான போக்குவரத்துகள் கிடையாது. இந்த விஞ்ஞான காலத்திலும் அங்கே ஒரே ஒரு இரயில் பாதைதான் இருக்கிறது. 486-மைல் தூரமுள்ள இப்பாதையை நிர்வகிக்க ஏற்படும் செலவு அபாரமாம்! இந்த இரயில்வே, கம்பெனி பிரெஞ்சுக்காரர்களுக்குச் சொந்தம்.

உலகத்தோடு தொடர்புகொள்ளும் எந்த வசதியுமில்லாத இங்கு மக்கள் எப்படி அறிவொளியைக் காண இயலும்? அதனால், அறியாமையும், பழைமையுமே மண்டிக்கிடக்கிறது. இவ்வளவு பெரிய நாட்டில் ஒரு கல்லூரி கூடக்கிடையாதாம்! ஹெயில் சலாசர், எப்படியாவது ஒரு பல்கலைக் கழகம் கட்டிவிட வேண்டுமென்று, கால்கோல் விழா நடாத்தியிருக்கிறாராம. கல்லூரியில் சேரக்கூடிய மாணவர்கள் இன்னும் தயாராகாததால் இன்னும் கட்டிடம் முடிக்கப்படவில்லையாம்!

இங்கு 1945-க்குப் பிறகுதான் உயர்நிலைப் பள்ளிகள் அமைக்கப்பட்டு கல்விப்போதனை செய்யப்பட்டு வருகிறது. ஹெயில் சலாசருடைய குழந்தைகள் கூட இங்கிலாந்தில்தான் படித்தனர். மூத்த மகன், இங்கிலாந்தில் படித்தவன். ஒரே பெண்ணான சேகி, இலண்டனிலுள்ள நர்ஸ் பயிற்சிக் கூடத்தில் பயின்று வருகிறாள். கொஞ்சம் வசதியும் வாய்ப்புமுள்ள குடும்பத்தார் தத்தமது குழந்தைகளை அமெரிக்காவுக்கும் இலண்டனுக்கும் மேற் படிப்புக்காக அனுப்புகிறார்கள்.

கல்வி ஒளியின் அவசியத்தை நன்கு உணர்ந்ததால் ஹெயில் சலாசர், அரசாங்க வருமானத்தில் மூன்றிலொரு பகுதியைக் கல்விக்காகவே செலவிட்டு வருகிறார். அது போதாதபோது, தன்னுடைய வருமானத்திலும், நிரம்பச் செலவழிக்கிறாராம். அறியாமையும் பழைமையும் நிரம்பிக் கிடக்கும இங்கே, 'ஜனநாயகம்' இன்னும் மலரவில்லை. எனினும் அதிகாரிகளாயிருப்போர், அத்துறையில் எதியோபியா முன்னேற வேண்டும் என்பதற்காகத் தேர்தல்களையும் அதன்மூலம் தேர்ந்தெடுக்கபபட்ட ஒரு பார்லிமெண்டும் இருக்கும்படிச் செய்திருக்கிறார்கள். எனறாலும், சர்வமும் ஹெயில் சலாசர் விருப்பந்தான்!

ஆள்வது ஹெயில் சலாசர் என்றாலும், நாட்டின எல்லாத் துறைகளிலும் அந்நியர்களே நிறைந்திருக்கின்றனர். அதற்குக் காரணம், எதியோபியர்களுக்கு இன்னும் அந்தப் பக்குவமும் பயிற்சியும் ஏற்படாததே என்று கூறப்படுகிறது.

போலீஸ் படையிலிருப்போரில் பலர் ஸ்வீடனைச் சேர்ந்தவர்கள் — அவர்கள்தான் பெரிய அதிகாரிகள். இராணுவம், பிரிட்டிஷ் அதிகாரிகள் வசம் உள்ளது. நாட்டின் பிரதம நீதிபதியே ஒரு பிரிட்டிஷ்காரர்தான்! அங்குள்ள பெரிய ஆஸ்பத்திரியை நிர்வகிப்பவர்கள் இத்தாலியர்கள். வியாபாரம், வெளிநாட்டு உறவு முதலியவைகளைக் கவனிக்கும் இலாகாக்கள் அமெரிக்கர் வசம் உள்ளன. பண நோட்டுகளை வெளியிட்டு, அவைகளில் கையெழுத்திடும் ரிசர்வ் பாங்கிக் கவர்னராகயிருப்பவரே, ஒரு அமெரிக்கர்! நாட்டில்விமானப்போக்குவரத்தை அமெரிக்கக் கம்பெனி ஒன்று நடத்தி வருகிறது. இரயிலோ பிரெஞ்சுக்காரர் சொத்து.

இப்படி எல்லாத் துறைகளிலும் அந்நியர்களே உள்ளார்கள். இப்போது ஆண்டுதோறும் பள்ளிகளுக்குச் சென்றுகொண்டிருக்கும் 60,000 குழந்தைகளும் படித்துப் பக்குவம் பெறுவதற்குள், நாடு என்ன ஆகுமோ!

எதியோபியாவின் தலைநகரம் அடிஸ்அபாபா. இதன்பொருள் புதுப்பூ என்பதாம்! இங்கு இரஷ்யாவின் அரசுத் தூதராலயமும் உள்ளதாம். அவர்களும், தம்மாலான 'கைங்கரியத்தை' எதியோபியாவுக்கு வழங்கி வருவதாகக் கூறப்படுகிறது.

இப்படிப்பட்ட நாட்டினை ஆளும் மன்னாதி மன்னர் ஹெயில் சலாசர் விரைவில் இந்தியாவுக்கு வரவிருக்கிறாராம்! முடிசூடி வாழும் மன்னரை, முடி சூடாமலே ஆட்சி நடத்தும் நேருபிரான் விரைவில் வரவேற்க இருக்கிறாராம்!!

★

★

வெளிநாட்டுக்காரர்கள் குறிப்பிட்ட சில துறைகளில் வியாபாரத்தில் இறங்கக்கூடாதென தென் வியட்நாம் இந்த கிழமை ஒரு தடை போட்டுள்ளது. மீன் இறைச்சி, பலசரக்கு, தான்யம், நிலக்கரி, எண்ணெய், விறகு, அரிசி, பருத்தி, பாத்திரங்கள், போக்குவரத்து கமிஷன் முதலிய துறைகளில் இனி வெளியார் ஈடுபடக்கூடாதாம். இப்போது இவ்வியாபாரத்திலிருப்போர் இன்னும் ஆறுமாதத்திலிருந்து ஓராண்டுக்குள் கடைகளைக் கட்டிக் கொள்ளுமாறு தவணை தரப்பட்டிருக்கின்றனர். இந்த உத்தரவால் இலட்சக்கணக்கான இந்தியர்களும் சீனர்களும் பாதிக்கப்படக்கூடும். 'சைகோனுக்குச் சம்பாதிக்கப்' போயிருக்கும் திராவிடர்களிலும் பலர் திரும்பிவரக்கூடும்!

★

சிறு கதை

# ஏழை

“பணக்காரர்களைத்தான் படைத்தானே இந்தப்பகவான்! ஏழைகளையும் ஏன் உண்டாக்கி இப்படி சித்திரவதைப் படுத்துகிறான்!”, என்கிற எண்ணம், அடிக்கடி ஏற்படுவதுண்டு எனக்கு. அதிலும், வாயுவேகமாகப் பறக்கும் கார்களும், வண்ணமயில்களென அசைந்து செல்லும் ஆரணங்குகளும், வானமளாவும் கட்டிடங்கள் எழும்பிடும் காட்சிகளும் நிரம்பிய சென்னையிலிருக்கும் ‘பஸ் ஸ்டாப்’புக்ளுக்குப் போய்விட்டால், போதும்! அப்பப்ப, ஆண்டவன் மட்டும் ஒரு நாளைக்கு வந்து பார்த்தால், தன்னுடைய சிருஷ்டியை நினைத்து நிச்சயம் தற்கொலை செய்துகொள்வான்!! பீளை நிரம்பிய கண்களுடனும், அப்போதுதான் பிறந்ததோ எனக் கருதும் பசும் சிசுக்களைக் கையிலேந்திய வண்ணமும், ஒளியிழந்த உருவங்களாயும் நின்றுகொண்டு “சாமி, பிச்சை! காலணா போடுங்க மகராஜா!”, என்று கதறும், ‘சுதந்திரப் பிரஜைகளின்’ தொகை ஒன்றா இரண்டா? வீதியே வீடாய், பார்வையே மொழியாய், பஞ்சடைந்த கண்களைக் காட்சியாக அமைத்து, இந்தப் பரிதாப உருவங்கள் வந்து கை நீட்டும் போது, வயிறு எரியும் எனக்கு. இதற்காகவே, நான் ‘பஸ்’ ஏருமலே, பல இடங்களுக்கு நடந்து போய் விடுவதுண்டு. அன்று ஆவணி அவிட்டம். அதாவது, உயர்குலத்தவர்கள் பூணூலணியும்நாள். “மேலான சர்க்கார்”, எங்களுக்கு விடுமுறை விட்டிருந்தார்கள்! வாரத்தில் ஆறு நாட்களும் ஆபீசே கதியாய்க் கிடக்கும் என்போன்ற குமாஸ்தாக்களுக்கென்று வாய்க்கும் இப்படிப்பட்ட ஓய்வு நாட்களிலாவது ‘உட்கார்ந்திருந்தோம் வீட்டில்’ என்கிற பாக்கியம் உண்டா? செச்சே! எங்கே விடுகிருள், என் மனைவி! ‘நகர்வலம் கிளம்புக!’, என்று உத்திரவிட்டு விட்டாள். தியாகராயநகரிலிருக்கும் சிநேகிதியின் வீட்டுக்குப் போக வேண்டுமாம். “சரி! பஸ் ஸ்டாப் பரிதாபங்களை இன்று சந்திப்பதைத் தவிர வேறு வழியில்லை”, என்று கருதிக்கொண்டு அவளுடன், கிளம்பினேன். என்ன ஆச்சரியம்! பஸ் நிற்கிற இடத்தில், ஒரு பிச்சைக்காரர்களைக்கூடக் காணோம். இதென்ன மாயமா, மந்திரமா!!

என்னைப்போல, ‘பஸ் நாதன்’ அருளைப் பெற அங்கே ‘தவம்’ இருந்துகொண்டிருந்த ஒருவரை கேட்டேன். அன்று ‘சென்னை’க்கு டில்லியிலிருந்து பெரிய மந்திரி ஒருவர் வருகிருராம்! அதை முன்னிட்டு பிச்சைக்காரர்களையெல்லாம் போலீசார் கொண்டுபோய் விட்டார்களாம்.

“எங்கே, கொண்டுபோய் விட்டார்கள்?”

“எங்காவது ஓரிடத்தில் போட்டு இன்று முழுதும் அடைத்திருப்பார்கள். இருட்டியதும், விரட்டிவிடுவார்கள்”. என்ருர் அவர். என் மனைவிக்கு, எங்கள் உரையாடலில் கவனம் இல்லை. பக்கத்திலிருந்தவருடைய மனைவி கட்டியிருக்கும் சேலையின் பூர்வோத்திரத்தையும் வரலாற்றையும் துருவித் துருவி ஆராய்ந்து கொண்டிருந்தாள். பஸ்நாதன் வந்தான்! எங்களுக்கு முன்பே வந்து ‘தவம்’ இருந்த பக்தர்களை ஏற்றிக்கொண்டு போய் விட்டான்! நானும் என் மனைவியும், அடுத்த ‘யுகத்தை’ எதிர்பார்த்து நின்றுகொண்டிருந்தோம்.

* * *

“சார்!”, எங்கிருந்தோ, ஈனத் தொனியில் ஒரு குரல் என்னைக் கூப்பிட்டது. திரும்பிப்பார்த்தேன். ஒரு சிறுவன். வயது பத்திருக்கும். நல்ல நிறம். பால் வடியும் வதனம் என்பார்களே அதுபோன்ற முகம்! ஆனால், முகத்தில் பால் வடியவில்லை; வியர்வை வழிந்துகொண்டிருந்தது. “சரிதான்!”, என்று முணுமுணுத்துக் கொண்டு, திரும்பிக்கொணடேன். “சார்!”, மீண்டும் அந்த ஈனக்குரல். என்னால் சகிக்க முடியவில்லை. நான் கேள்விப்பட்ட அஸ்திரத்தை எடுத்து வீசினேன்.

அரங்கண்ணல்

“டேய்! பேசாமெப் போறீயா, இல்லே, போலீசுலே பிடிச்சுக்கொடுக்கட்டுமா?”.

“நான் பிச்சை கேட்கலீங்க சார்!”, என்று கெஞ்சும் தோற்றத்துடன் கூறினுன்.

“பிறகு...?”

“ஆணி அடிக்கிறேன் சார்! காலையிலேயிருந்து காலணாகூடக் கிடைக்கலீங்க...தர்மப் பிரபு!........இரண்டு செருப்புக்கும் ஆணி அடிச்சுத் தரேன் சார்...ஏதாச்சும் கொடுங்க சார்...”

இந்த மாத ‘பட்ஜட்’டில் செருப்புக்காக இரண்டணாவை செலவழித்ததாகக் கருதிக்கொள்வோம் என்று கருதி, “இந்தா!” என்று செருப்புகளைக் கொடுத்தேன். பிளாட்பாரத்திலேயே அவன் கடையைப் பிரித்து, வியாபாரத்தை ஆரம்பித்துவிட்டான்.

பஸ் வரும் வரையில் அவனோடு ஏதாவது பேச்சுக்கொடுக்கலாம் என்று “ஏண்டா! நீ எங்கேயிருக்கிருய்?” என்று கேட்டேன்.

“நான் ஐகோர்ட்டுக்குப் பக்கத்திலேதான் சாமியிருக்கேன்! சொந்த ஊரு வேறெங்க......தொழில் செய்யலாம்னு எங்க அப்பன் அம்மா நான் மூணு பேரும் வந்தோமுங்க...போன மாசம், எங்க அப்பன் இழுத்துக்கிட்டுப்போன ரிக்ஷா மேலே சர்க்கார் பஸ் ஏறி செத்துப்போயிட்டுதுங்க... அதிலேருந்து அம்மா காயலாகிடக்குதுங்க...நேற்று ராத்திரி மழையிலே நல்லா நனைஞ்சு போயிட்டுதுங்க..... காலையிலேருந்து உடம்பு கொதியா கொதிக்குது...டீ வாங்கிக் கொடுக்கக் கூட காசில்லேங்க......அப்பன் உயிரோடு இருக்கப்பவே இப்படி ஆணி தைச்சு அரையணாஒருஅணா சம்பாதிக்கக் கத்துக்கிட்டேன்........காலையிலேருந்து ‘போணியே’ கிடைக்கலேங்க நல்ல வேளையா, எஜமான் நீங்க கிடைச்சுங்க!”

என்னமோ போலிருந்தது எனக்கு பையில் ‘நகர்வலத்துக்காக’ இருந்த இரண்டு ரூபாய்களில் ஒன்றை அவனுக்குக் கொடுத்துவிடலாமா என்று கூட நினைத்தேன். மறு நிமிடமே அந்த ஒரு ரூபாயை ‘தானம்’ செய்துவிட்டால் தியாகராய நகரிலிருந்து திரும்ப நானும் பிச்சையெடுக்க வேணடி நேருமே என்கிற கவனம் வந்து காப்பாற்றிற்று! இந்நேரம் வரையில், சேலை—ஜாக்கெட்—பேசரி—மாங்காய் மாலை இத்யாதி விஷயங்களைப் பற்றி அருகிருந்த அம்மணிகளிடம் ஆராய்ச்சி நடத்திய என் அன்புக்குரியாள், என் பக்கம் கவனத்தைத் திருப்பினுள். “எங்கே போனலும் உங்களுக்கு இந்தப் புத்தி போகாதுபோலிருக்கிறது!” என்று அவள் பார்வை சொல்லிற்று.

“ஏன் சாமி! நீங்க எங்கே குடியிருக்கீங்க!” ஆணி அடித்துக்

கொண்டிருந்த அந்தப் பையன் கேட்டான்.

"சரி! சரி! வாங்க..." என்று மீண்டும் என் மனைவி, பார்வைக் கணையைத் தொடுத்தாள்.

"தம்புச்செட்டித் தெரு, 110-ம் நம்பர் வீட்டிலிருக்கோம்பா..."

நான் சொல்லி முடிப்பதற்குள், என் மனைவியே அருகில் வந்துவிட்டாள். எங்கே, அவனை வீட்டுக்கு வரச்சொல்லிவிடுவேனோ என்று, அவளுக்குப் பயம்!

'சரி சரி! காசைக் கொடுத்துடுடு விரட்டுங்க.........ஊர் பேர் தெரியாத கழுதைங்ககிட்டேல்லாம் ஒன்றரை மணிநேரம் பேசிக்கிட்டு......'' மனைவியின் கடுமையான வார்த்தைகளைக் கேட்ட அந்தப் பையன் மருண்டு விட்டான். தன் தளவாடங்களையெல்லாம் சுருட்டிக்கொண்டு "இரண்டணா கொடுங்க சாமி!" என்றான்.

"ஏண்டா! இரண்டு செருப்புக்கு எட்டு ஆணி அடிக்க இரண்டணாவா ......ஊம்......'' என்று என் சிக்கனச் சீமாட்டி அவனிடம் பேரம் பேசலானாள்.

அவன் என்னைப் பார்த்தான். நான் பையில் சில்லரை இருக்கிறதா என்று தேடினேன். இரண்டணா சில்லரையாக இல்லை. இரண்டு ரூபாய் நோட்டும் ஒரு எட்டணாவும் தான் கிடந்தது. என்ன செய்வது? சில்லரை வேண்டுமே! இந்நேரம் வரையில் வராமலிருந்த சர்க்கார் வாகனம், வருவது தெரிந்தது.

"டேய் பையா! இந்த எட்டணாவைப் போய் மாத்திக்கிட்டு வர்றீயா ..." என்று அவனிடம் கொடுத்தேன். கையில் வாங்கிக்கொண்டு ஓடினான் அந்தப் பையன், போனவன் போனவன்தான். பஸ் வந்துவிட்டது! ஆளைக்காணும். என்மனைவி என்னைப் பார்வையோடு விட்டுவிடவில்லை'

* * *

"ஊம்! உங்களைச் சொல்லி என்ன பிரயோசனம்? எல்லாரும் உங்களை ஏமாந்தவர் என்று சொல்லுவதிலே அர்த்தம் இல்லாமலா இருக்கு! போயும் போயும் ஒரு பிச்சைக்காரப் பயலை நம்பி எட்டணாவைக் கொடுக்கலாமா...என்று ஆரம்பித்தவள், நாங்கள் தியாகராயநகர் போய், சிநேகிதி வீட்டிலிருந்து, வீட்டுக்குத் திரும்பும் வரையில் விடவில்லை. நான் என்ன செய்ய முடியும்? பேசாமல், 'முட்டாள் பட்டத்தை' ஏற்றுக்கொண்டேன். இருவரும் வீடு திரும்பும்போது இருட்டிவிட்டது — வீதி விளக்குகள் யாவும் ஏற்றப்பட்டு விட்டன. பூட்டைத் திறந்துகொண்டிருந்தாள் என் மனைவி. நான் படிக்கட்டில் நின்றுகொண்டிருந்தேன். எங்கள் வருகையை எதிர்பார்த்துக் கொண்டிருந்ததுபோல் யாரோ ஒரு சிறுவன் — பஸ் ஸ்டாப்பில் பார்த்த வனைவிடச் சிறியவன்—ஓடிவந்தான்.

"சார், நீங்கள்தானே, காலையில் முருகனிடம், செருப்புக்கு ஆணி அடிச்சது...."

"ஆமாம்!"

"அப்ப, இந்தாங்க......", என்று சினிமா விளம்பர நோட்டீஸ் ஒன்றில் சுற்றப்பட்டிருந்த ஆறு அணாக்களைக் கொடுத்தான். எனக்கு ஒரே ஆனந்தம். "பார்த்தியா", என்று என் மனைவியைக் கூப்பிட்டுக் காட்டினேன். பையன் நின்றுகொண்டிருந்தான்.

"ஏண்டா பையா! அவன் எங்கே ......?"

'உங்களுக்குச் சில்லரை மாத்திக்கிட்டு ஓடிவந்தான் சாமி......அப்ப... அப்ப......", என்று சொல்லிக் கொண்டே தேம்பி அழலானான், அவன்.

"அப்ப... என்னடா, என்ன?"

"சர்க்கார் பஸ் குறுக்கே வந்துச்சுங்க! அது ஏறி......" அவன் வார்த்தையை முடிக்கவில்லை. தேம்பித் தேம்பி அழுதுகொண்டே, சொன்னான்...... "அது ஏறிட்டுதுங்க...... ஒரே கூட்டம்! ஓட்டமா நான் ஓடினேன்...... நாங்க ரெண்டு பேரும் சேர்ந்துதாங்க தினசரி ஆணி அடிப்போம்...... அவன் போயிட்டான் சாமி...... போயிட்டான்... என்னைப் பார்த்ததும்நட்டுத்தடுமாறிக்கொண்டு உங்க விலாசத்தைச்சொல்லி இந்தச் சில்லரையைக் கொடுக்கச் சொன்னான்......"

இருதயத்தை சம்மட்டிகொண்டு அடிப்பதுபோலிருந்தது. காலையில் கண்ட பால் வடியும் வதனம், அவன் பேசிய பேச்சு, அன்னையின் மீது கொண்டிருந்த வாஞ்சை அத்தனையும் கவனத்துக்கு வந்தது.

அவன் போய்விட்டான்! இனி அவனைக் காண முடியாது!

என் மனைவியைப் பார்த்தேன், முந்தானையால் கண்களைத் துடைத்துக் கொண்டிருந்தாள். காசைக் கொண்டுவந்து கொடுத்த பையன் தெருக்கோடிக்குப் போய்க்கொண்டிருந்தான். அவனைத் தாண்டி, 'விர்' என்று ஒரு கார் பறந்துகொண்டிருந்தது. அதன் வெளிச்சத்தில், பிரம்மாண்டமாகக் கட்டப்பட்டுக்கொண்டிருக்கும் பாங்கிக் கட்டிடமும், இன்ஷியூரன்ஸ் கட்டிடங்களும் தெரிந்தன.

என் கண்களிலிருந்து பொலபொலவென்று நீர் உதிர்ந்தது.

★

## ஒரு தகவல்!

உலகத்திலுள்ள 10ல் 9பாக இலக்கியங்கள் யாவும் எட்டேஎட்டுமொழிகளுக்குத்தான் சொந்தமாம். ஆங்கிலம்; பிரெஞ்சு, ஜப்பானிய மொழி, ஸ்பானிஷ், ரஷ்யா, ஜெர்மன், இத்தாலி, சீனம் இவைதான் அந்தஎட்டுமொழியும்.

ஜப்பானிய மொழியும் ஸ்பானிய மொழியும் பெற்றிருக்கும் கவுரவம் கூட தமிழுக்கு இல்லையா என்று கேட்கிறீர்களா!!

இருக்கிறது, அவைகளையெல்லாம்விடச் சிறந்தஇலக்கிய வளமும்காவியக் குவியலும் நிரம்பப் பெற்றவர்கள் நாம்!ஆனால்,அதைஎடுத்துச்சொல்லும் வாய்ப்பில்லா ஊமையர்களாக உள்ளோம்!!

குறள் ஒன்று போதும். சிலம்புக் காவியம் செப்பும், நம் செல்வத்தை! இது அறியும் நிலையில் இல்லையே வடநாட்டார், துளசிதாசர் இராமாயணத்துக்கும் மகாபாரதத்துக்கும் தானே 'மொழி பெயர்ப்பு' விழா நடக்கிறது!

உலகிலேயே உன்னத மொழியென்றுபேசுவார்தமிழ்ப்புலவர் அவரது, கருத்தில் உறைக்கவேண்டுமே இந்தக் கண்றாவிச்சேதி!! தமிழில் இலக்கிய மொழி இல்லையாமே......

*6-ம் பக்கத் தொடர்ச்சி*

> தனியாக இருக்கிறார்கள், வேறு கட்சிகளிலே குடி புகுந்துவிடவில்லை,

என்று மட்டும் சேர்த்துப் பேசுவது என்ற போக்கு இருந்தால் இன்று அவர்,

> என்னை விட்டுப் பிரிந்து போனதுகள், ஆனாலும் என் கொள்கைகளையேகொண்டோராக இருப்பதால், தேர்தலில் ஆதரிக்கிறேன் என்றல்லவா கூறுவார்!

**ஆனால்—ஆகவே** எனும் இரு சொற்களும், பயன்படுத்தப்பட வேண்டிய முறை தவறிப் போவதால், தாலாட்ட வேண்டியவர்கள் தடிகொண்டு தாக்க வருவது போன்ற வேதனை தரும் விசித்திரம் விளைகிறது.

மற்றோர் வேடிக்கை, கேள், தம்பி!

வடநாட்டு நேருவுக்கு நாம் கருப்புக் கொடி காட்டினோமல்லவா? நையப் புடைத்தார்கள்! சிறையில் போட்டுச் சிதைத்தார்கள்!!

இதைக் கண்டோர் கண் கலங்கினர்.

இது குறித்துப் பேசினோர், பரிதாபப்பட்டனர்,

> **தி. மு. க. க்களின் திட்டம் எங்களுக்குப் பிடிக்காது, ஆனால் அவர்கள் மீது சர்க்கார் ஏவிய அடக்கு முறையைக் கண்டிக்கிறோம்**

என்று நம்மோடு நேசமற்ற ஏடுகளும எழுதின.

> இதுகள் என்னைவிட்டுப் பிரிந்துபோய் தனிக் கட்சி வைத்துக்கொண்டன, ஆனால் பாவம், வடநாட்டு எதிர்ப்பு உணர்ச்சியைக் கைவிடவில்லை; நேருவுக்குக் கருப்புக் கொடி காட்டும் அளவுக்கு ஆர்வமும் ஆற்றலும் காட்டினர்; மகிழ்கிறேன்; அவர்களைப் போலீஸ் காட்டுமிராண்டித்தனமாக அடித்தனர்; கண்டிக்கிறேன்.

இதுபோல் பெரியார் கூறும் போக்கிலே இருந்தால், பாசம் பால் போல் பொங்குமல்லவா! இப்படித்தான் பேசுவது முறை என்று தானே பகைவரும் கூறுவர்! கட்சியிலிருந்து, பிரிந்து போனார்கள், ஆனால் கடுமையான அடக்குமுறைக்கு ஆளானார்கள், என்று பச்சாதாபம் காட்டத்தானே வேண்டும்.

அந்தச் சம்பவத்தின்போது, ஆனால் போட்டுத்தான் பெரியார் பேசினார், எழுதினார்; எப்படி? நம்மிடம் பச்சாதாபம் காட்டும் முறையில்!

அடக்கு முறையைக் கண்டிக்க கடற்கரையில் கூட்டம் கூட நடத்தினார்.

அந்த 'ஆனால்' அவருடைய அவசரகாலத் திட்டம் என்பது இப்போது அவர் ஆனால் என்னும் பதத்தை வேறு நோக்குடன் பயன்படுத்துவதிலிருந்து தெரிகிறது.

இப்போது பெரியார் பேசுகிறார்,

> நான் கொடிகொளுத்து என்றேன்.
>
> சர்க்கார் என்னிடம் நெருங்கவில்லை.
>
> கருப்புக்கொடி பிடித்தோம்; போலீஸ் பாதுகாப்பு கொடுத்தது.
>
> ராமர் படம் கொளுத்தினேன்; ஒருதுளி சர்க்கார் அடக்கு முறையும் கிடையாது.
>
> நீ, நேருவுக்குக் கருப்புக் கொடி காட்டினாய். என்ன செய்தார்கள்?
>
> பூட்ஸ்காலால் உதைத்தார்கள்.
>
> உருட்டி உருட்டித் தள்ளினார்கள்.

என்று பேசியிருக்கிறார்.

நான் கிளர்ச்சி செய்தேன் அடக்குமுறை ஏவவில்லை, ஆனால் நீ கருப்புக் கொடி காட்டினாய், உதை உதை என்று உதைத்தார்கள்! என்று பேசுகிறார்.

ஆனால் எனும் சொல் இதற்குப் பயன்பட்டது!

ஒருமுறைக்குப் பன்முறை இந்தப் போக்கினை அலசிப் பார், தம்பி, தமிழகத்தின் அரசியலே புரியும்!

நம்மோடு சேர்ந்திருப்பவர்களுக்குப் பெரியார் பயமூட்டப் பார்க்கிறார்.

> ஓ! தோழர்களே! அங்கே இருந்தால் உங்களுக்கு அல்லல், அவதி, அடக்குமுறை தாக்கும் என்னோடு இருந்தால், துளியும் தொல்லை இல்லை. துரைத்தனம் உங்களைத் தொடாது.
>
> என்ன கிளர்ச்சி செய்தாலும், என்னோடு இருப்பவருக்கு இம்சை நேரிடாது. சந்தேகமிருந்தால், கொடி கொளுத்தும் திட்டம், பிள்ளையார் உடைப்பு, ராமர் எரிப்பு எதைவேண்டுமானாலும் பார். போலீஸ் நம்மை ஏதாவது செய்ததா? அதுகள் கதை தெரியுமா? அதுகள் கருப்புக் கொடி பிடித்தன! உதைத்தார்கள்! உருட்டினார்கள்! சுட்டுத் தள்ளினார்கள்!
>
> ஆகவே அதுகளோடு சேராதே! என்னோடு வா! தொல்லை வராது! துரைத்தனம் தொடாது!

என்று அழைக்கிறார்.

பூட்ஸ் காலால் உதைபட்டோம்—உண்மை. உருட்டி உருட்டித் தள்ளப்பட்டோம், உதை உதை என்று உதைத்தனர்; மறுக்கவில்லை! துப்பாக்கியால் சுட்டனர்—பிணமாயினர் தோழர்கள்! ஆமடா தம்பி, ஆமாம்! மிகமிக நாகரீகமான முறையில், நல்லாட்சியுள்ள எந்த நாட்டிலும் அனுமதிக்கப்படும் கருப்புக்கொடி காட்டும் முறையில் கிளர்ச்சி செய்தோம்—பெரியார் கூறுகிறபடி

> பூட்ஸ் காலால் உதைத்தனர்.
>
> உருட்டி உருட்டித் தள்ளினர்.
>
> உதை உதை என்று உதைத்தனர்.

இல்லை என்று சொல்லவில்லை—இது இழுக்கு என்று பேசும் பெரியாரோடு நாம் இன்று இல்லை.

# தூளுரைப்போம்!

[கருணானந்தம்]

—

ஏழாண்டைக் கடந்தின்று எட்டாம் ஆண்டின்
எழிற்படியில் ஏறிவிட்ட கழகந் தன்னைப்
பாழாகும், வீணாகும், பட்டுப் போகும்,
படராது, தழைக்காது, பார்ப்போம் என்றார்!
ஆழாழி கரைமோதி நிற்ப தைப்போல்,
ஆயிரம் பல் லாயிரம்பேர் அணிவ குத்து
வீழாது பெருகிவரும் விந்தை கண்டு
வியப்போடு திகைத்து நின்றார்.
வென்றோம்! ஆனால்—

'அன்னியரின் ஆதிக்கம் தாய கத்தில்
அணுவளவும் அனுமதியோம்' என்று சீறிச்
சின்னதென இகழ்ந்துரைத்த சிறிய நாடும்
செயலாற்றத் துணிந்துவிட்ட சிறந்த நாளில்,
தென்னவரின் நன்மைகளைச் சிறிதும் எண்ணாத்
தீயமன வடநாட்டார் அயலார் என்று
இன்னமுந்தான் உணர வில்லை; நம்மவர்கள்
ஏமாற்றம் தொலைவதெந்நாள்?
வாழ்வ தெந்நாள்?

சொந்த நலன் பெரிதென்று சோரம் போகத்
துளியேனும் அஞ்சாத துரோகக் கும்பல்,
எந்தநிலை வந்தாலும் இனத்தை ஏய்க்க
இங்கிருக்கும் கங்காணிக் கூட்டம் யாவும்
சிந்தையிலே தெளிவுபெற இடித்து ரைத்துச்
சீரியநம் திராவிடத்தின் செல்வம் மீட்டுச்,
சுந்தரமாய்த் தனியரசு சாம்ப தற்குச்
தூளுரைப்போம், தோள்கொடுக்குந்
துணைவ ரெல்லாம்.

*உதைப்பான்; பட்டுக்கொள்.*

*அடிப்பான்; பொறுத்துக்கொள்.*

*சுடுவான்; தாங்கிக்கொள்.*

*பத்துபேர் செத்தாலும் கவலைப்படாதே.*

*செத்தவர் போக மிச்சம் இருப்பவர், மானத்தோடு வாழட்டும்.*

இப்படி போதித்த பெரியாருடன் நாம் இருந்தோம்.

அடக்குமுறை, வெறிக்கோலத்தில் துரத்தியபோது, நம் தோழர்கள் கலங்காதுநின்றபோது, மனக்கண்ணால் அந்தப் பெரியாரைத்தான் கண்டனர்.

அடிபட்டோம், உதைபட்டோம், என்று கூறிக் கொள்வதிலே, வெட்கமில்லை, பெருமிதத்தோடு கூறுகிறோம், தாயக விடுதலைக்காக இந்த அளவுக்காவது துணிவு பெற முடிந்ததே என்று மகிழ்ச்சியோடு கூறுகிறோம், பெரியார் நம்மோடு இல்லாதிருக்கும் இந்நிலையில், அடக்குமுறை கண்டு அஞ்ச நேரிட்டுவிடுமோ என்று ஐயம் கொண்டிருந்த நாம், இல்லை, அவர் இன்று நம்மோடு இல்லாமற் போகலாம், அவர் ஊட்டிய ஆர்வமும் வீரமும் அஞ்சா நெஞ்சமும் நம்மை விட்டுப் போய்விடவில்லை.

*உதைக்கிறீர்களா? பட்டுக்கொள்கிறோம்!*

*சுடுகிறீர்களா? தாயகத்தின் தளை உடைத்திடும் பணிக்கு இன்னுயிர் தருகிறோம் என்று கூறினோம்.*

இது, என்றென்றும், எண்ணுந்தொறும் எண்ணுந்தொறும், நெஞ்சினை நெகிழச் செய்திடும் சம்பவம்.

இது கேலிக்கும் உதவும் என்று யார் எண்ணியிருப்பர்; ஆனால்— ஆகவே எனும் பொல்லாத சொற்களின் போக்கினாலே தம்பி, எது கண்டு எவரும் பாராட்டுவரோ அதே கஷ்ட நஷ்டம் ஏற்ற சம்பவத்தையே, பெரியார், கேலிபேசப் பயன்படுத்திக்கொள்ளும், விசித்திரம் ஏற்படுகிறது.

தம்பி, பெரியாராவது. தம்மோடு இருந்தால் கிளர்ச்சி செய்யலாம், சர்க்கார் 'கிச்சுகிச்சு' மூட்டுவரேயன்றி கொட்டமாட்டார்கள், தட்டமாட்டார்கள் என்று ஆசைகாட்டி, அதன் மூலமாக நமது அணிவகுப்பிலேயிருந்து யாரையாவது இழுத்துக்கொள்ளலாமா என்று முயற்சிக்கிறார் என்று வைத்துக்கொள்வோம்; ஆசைக்கு ஆட்படும் போக்கு நம்மிடம் இருந்தால்,

இதைவிட, காங்கிரஸ் சுவைமிக்க ஆசை காட்டுகிறதே,

பதவி கிடைக்கும் என்று!—அணி வகுப்பிலே, யார், இளித்தவாய ராயினர்!

கொள்கைக்காக கொடிய ...டக்கு முறைக்கு ஆளாஇனுர் ...ள் என்பது புகழின் சின்ன ...ாயிற்றே! இதைக் காட்டியும் கலி பேச முடிகிறதே!!

அடக்குமுறை கண்டு அஞ்சாம ...ிருக்கும் மனப்போக்கு, பூண் ...பாட்ட தடியால் அடித்தாலும் ...ட்ஸ் காலால் உதைத்தாலும், ...ாங்கிக் கொள்ளும் வீர உள் ...ாத்தை, பெரியாரே! எமக்குத் ...ாரும்!! தாரும்!! — என்று கேட் ...க் கேட்டுப் பெற்றேம்.

இன்று அடிபட்டார்கள், உதை ...ட்டார்கள், ஆகையால் அங்கே ...பாகாதீர்கள்—நான் நடத்தும் ...ளர்ச்சியிலே, புகை இருக்கும் ...நெருப்பு இராது, நெருப்பே தீண்டி ...லும் சுடாது; சுட்டாலும புண் ...ாகாது; புண்ணுனாலும் மருந்தில் ...ாமலே குணமாய்விடும் என்று ...பேசுவது கேட்டா, தம்பி, நீ நமது ...ழகத்தைவிட்டுச் சென்றுவிடு ...வாய்! அப்படி நீ கேட்பதே, தவறு அண்ணு!! என்று கேட்டிடும் எண ...ணற்ற தம்பிமார்களின் கோபப் ...பார்வையை அல்லவா நான் காண் ...கிறேன்!

அடிப்பார்கள்! உதைப்பார்கள்! ஆகவே, என்னேடு வாருங்கள்—எந்தக் கிளர்ச்சி செய்தாலும் சர்க்கார், கிட்டேகூட வரமாட்டார்கள் என்று ஆசை காட்டும் பெரியார் ஒரு அரைமணி நேரம் மட்டும் தான் பேசுகிருர், உடனே உண்மைப் பெரியார் முழக்கமிடுகிருர், அதே கூட்டத்தில், 5000 பேர் தூக்கு மேடை ஏறச் சித்தமாக இருக்கவேண்டும், தெரிகிறதா!—என்று கூறுகிருர்!

இதிலிருந்து உனக்கு என்ன, தம்பி, புரிகிறது! எனக்குத் தலை சுற்றுகிறது!

**அங்கே இருந்தால் அடிப்பார்கள், ஆகவே அங்கு இராதே; ஆனுல் இங்கே வா, தூக்குமேடை ஏற!!**

இதிலே உள்ள ஆகவே ஆனுல்—இவைகளின் போக்கு, எப்படி இருக்கிறது, என்பதை ஆர அமர இருந்து எண்ணிப்பார்!

அடிபட்டோரே! உதைபட்டோரே! அடக்குமுறைக் கொடுமைக்கு இலக்கானேரே! அவர்கள் எம்மை அடித்தபோது ஏற்பட்ட வேதனையைக் காட்டிலுமன்ரு, அதுகுறித்துக் கேலி பேசுவது கேட்டு வேதனை எழுகின்றது. அருந்தொண்டாற்றக் கிளம்பினேரையா அடித்திடக் கிளம்பினீர்! அறிவிலிகாள்! பிரிந்தோர் எனினும் அவரும் எம்மவர் என்பதை மறந்தா நிற்போம்! என்று கூறி, களம்வந்து துணைபுரிவர் நல்லோர். அந்த அளவுக்கு மனம் இடம் தராது போயினும், ஐயகோ! அடிக்கின்றனரே, அறியாச் சிறுரை! என்று கூறி கண்ணீர் சிந்தவேனும் இசைவர் இதயம் படைத்தோர். அடித்தனர், உதைத்தனர், உருட்டினோர்! என்று கேலியல்லவா செய்கின்றனர் — என்று தோன்றும் தம்பி! இதையும் தாங்கிக்கொள்ளத்தான் வேண்டும்.

**போர்க்குறிக் காயமே**
**புகழின் காயம்!**
**யார்க்கது வாய்க்கும்!**
**ஆ! ஆ! நோக்குமின்!**
**அனந்தம் தலைமுறை**
**வருந்தனி மக்கள்**
**தினந்தினம் தாம் அனுபவிக்கும்**
**சுதந்திரம் தந்தது**
**தம்முனேர் நொந்த**
**புண்ணெனண்ணிச்**
**சிந்தை அன்புஉருகி**
**சிந்துவர் கண்ணீர்**

என்ருர் **மனேன்மணியம்** ஆசிரியர்.

புகழின் காயம் பெற்றேம்! மேலும் மேலும் பெறுவதற்கான உள்ள உரம், இத்தகு கேலி மொழிகளால் ஏற்படும். ஆகவே, தம்பி, கவலைப்படுவானேன்!

ஆனுல்...... ஆகவே எனும் சொற்களின் சிலம்பம் தரும் சுவையான பாடம் கண்டு மகிழத்தான் இதைச் சொல்கிறேனேயல்லாமல், இதிலே குறிப்பிடப்பட்டுள்ள அரசியல் பிரச்சினைகளுக்காக அல்ல.

**'இந்த நாட்டை இன்றைய தினம் ஆளுகிறவர்கள் வடநாட்டார்கள்; பனியாக்கள், மார்வாடிகள் குஜராத்திகள்தானே! அவர்கள் இந்த நாட்டை ஆளுவதற்கு உள் உளவாய் இருந்துகொண்டு இருப்பவர்கள் நம் நாட்டுப் பார்ப்பனர்கள்; அவர்களுக்குக் கூலியாயிருப்பவர்கள், திராவிட சமுதாயத்தைச் சேர்ந்த சில விபீஷணர்களும், அனுமார்களும் ஆவார்கள்."**

பெரியார் பேருரையில் ஓர் பகுதி இது.

ஆகவே, விபீஷணர்களையும் அனுமார்களையும் தேர்தலில் ஆதரிக்கக்கூடாது இந்நாட்டு காமராஜர் போன்ற காங்கிரஸ் தலைவர்களதான், உள் உளவு ஆட்கள் —என்று கூறத்தோன்றும் உனக்கு

ஆகவே போட்டால் இந்தக் கருததுதான் பிறக்கும்.

ஆகவே, **ஆகவே**போடாமல் **ஆனுல்** போடடு, காமராஜர் காங்கிரஸ்காரர்தான், அந்த முறையில் வடநாட்டுக்குக் கங்காணிதான், ஆனுல் அவர் நல்லவர், நம்மவர், ஆகவே அவரை ஆதரிக்கக் கடமைப்பட்டிருக்கிறேம், அவர் 'ஒண்டிக்கட்டையாக' வெற்றிபெற்ருல் பலன் இல்லை, ஆகவே காங்கிரஸ் மெஜாரடியாக வெற்றிபெறப்பாடு பட்டுத் தீரவேண்டும். ஆனுல் காங்கிரஸ் நல்ல ஸ்தாபனம என்று எண்ணிவிடாதீர்கள், அது முதலாளி முகாம், பார்ப்பனப் பாது காப்புச்சபை, வடநாட்டுக்கு நாட்டைக் காட்டிக் கொடுக்கும் கங்காணி ஸ்தாபனம்—என்று எடுத்துரைக்கப்படுகிறது.

இந்த அரசியல் தனி ரகமாக இருக்கிறதே என்பதற்காக அல்ல இதனைக் கூறுவது, இந்தக் கருத்தோவியத்தில், **ஆனுல்-ஆகவே** என்ற சொற்கள் அரசியல் போக்கையே, தம் இஷ்டப்படி ஆட்டிப்படைக்கும் வேடிக்கையைக் கவனித்துக் களிப்புறுவதற்குத்தான்.

அண்ணு! உன் நோக்கம் இந்த இரு சொற்கள் நடத்தும் சிலம்ப

வேலையின் வேடிக்கையை எடுத்துக்காட்டுவதாக இருப்பினும், இடையிடையே வரும் அரசியல் பிரச்சினைகளை அடியோடு எப்படி ஒதுக்கிவிட முடியும்—ஆகவே ஒரு கேள்வி கேட்கிறேன் — காங்கிரஸ் கெட்டதுதான், காமராஜர்போன்றவர்கள் வடநாட்டு ஆதிக்க வளர்ச்சிக்கு உடந்தைதான், ஆனால் காங்கிரசை இதற்காக ஒழிப்பது என்று நாம் முயற்சிக்கும்போது, அதனைச் சாக்காகக்கொண்டு சந்து கிடைத்ததும் பொந்து ஆக்கிக்கொள்ளும் நச்சுகள் இடம் பெற்றுவிட்டால் என்ன செய்வது சொல்லு கேட்போம் — என்று கேட்கத் தோன்றும், தம்பி.

பெரியார் இதை எண்ணிப்பார்க்காமலில்லை! இதுபற்றி அவர் தீர்க்கமாக ஆலோசித்துப் பார்த்தான் பிறகு, சொல்லுகிறார் — சொல்லி இருக்கிறார்......

> "காங்கிரசை ஒழிப்பதற்கு முதல் வேலை காங்கிரஸ் எதிரிகளுக்கு வெற்றி உண்டாக்குவதே யாகும். உண்மை எதிரி கிடைக்காத இடத்தில் எதிரி வெற்றி பெறமாட்டார் என்று கண்ட இடத்தில் வசதிபோலப் பார்த்து யாருக்கு ஓட்டுப் போட்டால், காங்கிரஸ் தோல்வி அடையும் என்பதாகக் காணக்கிடைக்கிறதோ அந்தப் பெட்டியில் ஓட்டுப் போடுங்கள். வேறு அபேட்சகர் இல்லை என்றோ, வெற்றி பெறமாட்டார் என்றோ கண்ட இடத்தில், பார்ப்பனருக்கு ஓட்டு போட்டால்தான் காங்கிரஸ் அபேட்சகர் தோல்வியுறுவார் என்று கண்டால், பார்ப்பனருக்கு ஆவது ஓட்டு செய்து காங்கிரசைத் தோற்கடிக்க வேண்டியது அறிவுடைமை யாகும். கங்காணிகள்—துரோகிகள்—உண்மைச் சூத்திரர்கள் — பேச்சைக் கேட்டு எந்தக் காரணத்தைக்கொண்டும் காங்கிரஸ் கங்காணிப் பெட்டியில் ஓட்டு விழும்படி நடந்து கொள்ளாதீர்கள். எப்படியாவது காங்கிரஸ் அழிய வேண்டும் ஒழிய வேண்டும், ஏன் என்றால் அது நம் நாட்டுப் பார்ப்பனர்போல் தேவை இல்லாதஸ்தாபனம்—கேடான கேட்டை விளைவிக்கும் உளமாந்தை போன்ற ஸ்தாபனம் என்பதே நமது முடிவு."

தம்பி! இன்னும் என்ன விளக்கம் வேண்டும்?

அப்போதைக்கு இப்போதுள்ள நிலைமை எப்படி இருக்கிறது என்று பார்த்தால், சென்ற தேர்தலின்போது, அபேட்சகர்கள்நிறுத்தும் வேலையில் ஆச்சாரியார் ஈடுபடவில்லை, இப்போது டி.டி.கிருஷ்ணமாச்சாரியார் அந்தக் காரியத்தைக் கவனிக்கப்போகிறார்!

இந்தக் கட்டம் வந்ததும், மீண்டும் அந்தப் பொல்லாத சொற்கள் வந்துவிடுகின்றன! வளைவும் நெளிவும் தெரிகின்றன.

**ஆனால், ஆகவே** என்ற சொற்களின் சுவைமிகு காதையை நான் நமக்குச் சாதகமாக்கிக்கொண்ட கோபத்தில், சொன்னதைச் சொல்லும் கிளிப்பிள்ளைகள், அதே பாணியில் தன்னால் எழுதும். படித்துச் சுவைத்திடுவதுடன், நாம் நமக்காகமட்டுமல்ல, நம்மைத் தாக்குவோருக்கும் உதவுகிறோம் என்று பெருமையும் கொள்ளலாம்.

நினைக்க நினைக்க வேடிக்கை வேடிக்கையாக இருக்கிறது, இந்த இரு சொற்கள் நடத்தும் விளையாட்டு.

குமாரசாமி ராஜா, வடக்கு பொருளைப் பாழாக்குகிறது, ராஜ்ய சர்க்கார் விஷயத்தில் அனுவசியமாகக் குறுக்கிடுகிறது, அதன் இந்தப் போக்கை நாம் எதிர்க்க வேண்டும்—என்றெல்லாம் பேசினாரல்லவா!

அந்தப் பேச்சுடன் அவர், 'ஆகவே' எனும் சொல்லை இணைத்திருந்தால், இன்று, தென்னாட்டு விடுதலைப் போர்த் தலைவராகி, செயல்பட வேண்டிவரும். அவருக்கு அது விருப்பமில்லை. ஆகவே, **'ஆகவே'**வை விட்டுவிட்டார். இப்போது **'ஆனால்'** பேச ஆரம்பித்துவிட்டதாகத் தெரிகிறது.

வடக்கு அப்படிச் செய்கிறது, அது, இது என்று நான் சொன்னேன்—ஆனால் எனக்கு வடநாடு தென்னாடு பேதம் கிடையாது—அந்தக் காரியத்தை நான் ஆதரிக்கவும்மாட்டேன்—எதிர்க்கக் கூடச் செய்வேன்—நான் காங்கிரஸ்வாதியாக்கும்!—என்று நிருபரிடம் கூறுகிறாராம்.

பார்த்தாயா, தம்பி, ஒரே ஒரு சொல், ஒருவருடைய போக்கையே மாற்றிவிடுகிறது.

"ஆகவே" என்று அவர் கூறினால் எப்படி இருந்திருக்கும் — ஆனால் என்று கூறும்போது எப்படி இருக்கிறது!

மைசூரில் முதலமைச்சராக இருந்த அனுமந்தையாவும்,

> காங்கிரஸ் கெட்டுவிட்டது.
>
> சுயநலமிகள் புகுந்து விட்டார்கள்.
>
> இந்தியா, அமெரிக்காவுக்கோ ரஷியாவுக்கோ அடிமை ஆகிவிடும்.
>
> ஏதோ, நேருவின் புகழ், செல்வாக்கால் அந்த அவதி இன்னும் வரவில்லை.

என்பதாகப் பேசியிருக்கிறார்.

"ஆகவே"—என்று பேசினால் ஒரு தினுசான அனுமந்தய்யாவும், 'ஆனால்' என்று பேசினால் முற்றிலும் வேறுவிதமான அனுமந்தய்யாவும் தெரிவார்களல்லவா!

ஆகவே, தம்பி, ஆனால் என்பதற்கும் ஆகவே என்பதற்கும் உள்ள மகத்தான சக்தி, பிரச்சினைகளை, நிலைமையை, போக்கை எப்படி எப்படி எல்லாம் உருவாக்க, மாற்றி அமைக்க முடிகிறது என்பதுபற்றி எண்ணிப் பார்த்தேன், ஏ! அப்பா! ஏடு போதாது அவ்வளவு கருத்தலைகள் எழுகின்றன! ஆனால் அவ்வளவும் ஒரு இதழில் தரமுடியுமா, ஆகவே, இத்துடன் இதனைநிறுத்திக்கொள்கிறேன். உறக்கமும் வருகிறது, காகம் கரைவது காதில் விழுகிறது.

அன்பன்,



# உலக அரங்கில்

### சூயஸ்

*

எதிர்பார்த்தபடியே மென்சிஸ் தூதுக் குழுவின் சமரச முயற்சிகள் முறிந்துவிட்டன. அவரும் எகிப்தைவிட்டுப் புறப்பட்டுவிட்டார். பேச்சு வார்த்தைகள் முறிந்த இந்த சமயத்தில் பிரிட்டனும் பிரான்சும் தமது படைகளை சைப்ரஸ் தீவில் கொண்டு வந்து குவிக்க முனைந்துள்ளன! எகிப்து நாசர், தகராறைச் சுமுகமாகத் தீர்க்கவே தான் விரும்புவதாக அறிக்கை வெளியிட்டுள்ளார். சூயஸ் கால்வாயில் எகிப்துக்கு உரிமை இருக்கிறதென்கிற அடிப்படையில் பேச்சு வார்த்தைகள் நடக்கவேண்டும் என்பதே எகிப்தின் முக்கிய நோக்கமாகும், தகராறை ஐ. நா. சபைக்குக் கொண்டு போய்த் தீர்த்துக்கொள்ளலாம் என்று ஒரு யோசனை இருந்து வருகிறது. ஐ. நா. சபைக்குப் போனா எந்தச் சிக்கலும் விரைவில் தீர்க்கப்பட்டது கிடையாதே! சூயஸ் விஷயத்தில் மட்டும் என்ன கிடைத்துவிடப் போகிறது. அதற்குள், எகிப்து எல்லா உரிமைகளையும் பெற்றுவிடுமே என்று பிரிட்டிஷ் வட்டாரங்கள் கூறுகின்றன. பெரும் போர் மூளுமோ, என்கிற அறிகுறி மீண்டும் தென்படத் துவங்கியிருக்கிறது இந்தக் கிழமை.

*

### சைப்ரஸ்

*

கிரேக்கத்துடன் இணையக் கோரும் சைப்ரஸ் கிளர்ச்சியை அடக்குவதில் பிரிட்டன் இன்னும் தீவிரம் செலுத்தி வருகிறது. கிளர்ச்சித் தலைவரான மகாரியாஸ் பலவித சமூக விரோத காரியங்களில் ஈடுபட்டதாக நிரூபிக்க பிரிட்டிஷ் அதிகாரிகள் "பொய் தஸ்தாவேஜுகளை" தயாரித்து வருகிறார்களாம்! மகாரியாஸ் இப்போது தீவில் சிறை வைக்கப்பட்டுக் கிடக்கிறார். பிரிட்டனின் இப்போக்கை விளக்கி ஐ. நா. சபையின் கிரேக்க நாட்டு உறுப்பினரான கிரிஸ்டியன் பலமாஸ் என்பவர் உலகிலுள்ள 75 நாடுகளுக்கும் கடிதங்களை அனுப்பியிருக்கிறார், 'உண்மையை உணருமின்' என்று கூறி.

*

### பாகிஸ்தான்

*

பாகிஸ்தான் அரசியல்நிலைமைகள் வரவர மோசமாகிக்கொண்டு தான் போகின்றன. அதில் ஒரு கட்டம் இந்தக் கிழமை, பிரதமராயிருந்த அலி, தனது பதவியையும் ராஜினமா செய்ததாகும். இவர் ராஜினமாவுக்குக் காரணம், முஸ்லீம் லீக் என்று கூறப்படுகிறது. தற்போது லீக்கை வளர்க்கவும் செம்மைப்படுத்தவும் தக்க தலைவர்களில்லை. அதனால் கடந்த தேர்தலில் தோல்வியடையவே, எதிர்க்கட்சிகளுடன் சேர்ந்தே அலியால் அரசு அமைக்க முடிந்தது! எதிர்க்கட்சிகளின் நேசம் வேண்டுமென்பதற்காக எல்லைக்காந்தியின் சகோதரரான கான் சாகிப்பை, மேற்கு பாகிஸ்தான் பிரதமராக ஆக்கினார். கான் சாகிப், லீகின் எதிரியாயிருந்தவர்! அதனால், லீகர்களுக்கு அலி மீது கோபம் ஏற்பட்டது. அது வளரவே, இப்போது தான் சேர்ந்திருந்த கட்சியையும் பதவியையும் விட்டு விலகியிருக்கிறார். புதியபிரதமராக கிழ்வங்கத்தைச் சேர்ந்த சுரவர்த்தி அழைக்கப்பட்டிருக்கிறார், இவர் லீக் அல்ல! எதிர்க்கட்சித் தலைவர்!! லீக் அல்லாத ஒருவர் பாகிஸ்தான் பிரதமராக வருவது, இதுதான் முதல் தடவையாகும்.

*

### ரஷ்யா

*

தாங்கள் இதுகாறும் வழங்கி வந்த 'ஸ்டாலின பரிசு' எனும் சர்வதேச சமாதானப் பரிசின் பெயரையும், ரஷ்யா மாற்றிவிட்டது. இனி, அவை 'லெனின் பரிசு' என்று அழைக்கப்படும். ஒவ்வொரு ஆண்டும் லெனின் பிறந்த நாள் அன்று (ஏப். 22) ரஷ்யாவில், விஞ்ஞானிகள் கலைஞர்கள் முதலியவர்களுக்கு 50-தேசிய பரிசுகள் வழங்கப்படுமாம். ரஷ்யாவில் மட்டுமின்றி உலக அரங்கில்பிரசித்தி பெற்றவர்களுக்காகவும் 10-பரிசுகள் வழங்கப்பட்டு வருகிறது. இந்தப் பரிசின் தொகை பல இலட்ச ரூபாய்களாகும். இவைகளோடு வழங்கப்படும் "மெடல்'களில் இனி 'ஸ்டாலின்' சின்னம் இருக்காது! 'லெனின்' காட்சி அளிப்பார்.

* * *

உலக முழுவதுமுள்ள குஷ்டரோகிகளைப் பற்றி அண்மையில் ஒரு புள்ளிவிபரம் தயாரித்துள்ளது, உலக சுகாதார சங்கம். அதன்படி ஒரு கோடியிலிருந்து ஒன்றேகால் கோடி வரை உலகின் பல நாடுகளிலும் குஷ்டரோகிகள் உள்ளனராம்!

*

### சவூதி அரேபியா

*

இங்கிலாந்து காமன்வெல்த் மாநாட்டுக்குப் போய் பல நாடுகளையும சுற்றிவிட்டு வந்த நேரு, ஏன் சவூதி அரேபியாவுக்குப் போகவில்லையாம் தெரியுமா? சவூதி அரேபிய மன்னரே பிறகு வருமாறு தெரிவித்தாராம்! காரணம் வேறெதுவுமல்ல. நேரு வந்தால் தங்குவதற்காகப் புதிதாகவே ஒரு வீடு கட்டப்படுகிறதாம் அங்கு. அந்த வீடு, முடியாததால், அப்படி எழுதினாராம். இப்போது அந்த வீடு கட்டி முடிக்கப்பட்டுவிட்டதால் நேரு மீண்டும் அழைக்கப்பட்டு போகப் போகிறாராம்!

★

# ★ பழமைப் பற்று! ★

"இது ஏது தெரியுமோ? எங்கள் தாத்தாவுக்கு அப்பா கோயம்புத்தூரில் வாங்கியது. இதுதான் நான் சொன்னேனே, எங்கள் சிற்றப்பா என்று, அவர் கைத்தடி. இந்தக் கரண்டியும் அடுக்கும் எங்கள் குடும்பத்தின் மூலச் சொத்து; முதல் மகனுக்கு என்றே வழிவழியாக வருவது" என்று எதை எதையோ காட்டி அவற்றோடு தொடர்பான பல கதைகளைக் கூறிடும் போக்கு பலரிடம் இருப்பதைக் காணுகிறோம்.

தொடர்புடையவர்களும் தெரிந்தவர்களும் பயன்படுத்திய பொருள்களைப் பழமை என்று பாதுகாக்கின்ற முறையேயன்றி புகழுடன் விளங்கியவர்களுடைய பொருள்களைப் பொருள் கொடுத்து வாங்கிப் போற்றும் பழக்கமும் பலரிடத்து உண்டு.

சாதாரணமான பல்தான் அது; மனிதனுடையதுதான். ஆனால் அதை ஒருவர் 730 பவுன் (ஒரு பவுன் சுமார் ரூ.13—8—0 ஆகும்) கொடுத்து வாங்கித் தன மோதிரத்தில் வைரக் கல்லைப் பதிப்பதுபோல் பதித்து அணிந்து கொண்டார். நிலத்திற்கு இருக்கும் ஈர்க்கும் ஆற்றலைக் கண்டுசொன்ன சர் ஐசக் நியூட்டன் என்ற விஞ்ஞானியினுடையது அந்தப் பல்!

மாவீரன் நெப்போலியன் தொப்பி ஒன்று ஏலத்தில் விலை கூறப்பட்டது; 32 பேர் ஏலம் கேட்டனர். 80 பவுன் விலை சொன்னவர்க்கு அது கிடைத்தது—!

பிரஞ்சு நாட்டுப் பெருவீரன் வால்டைர் பயன்படுத்திய பிரம்பு பெற்ற விலை 500 பிராங்குகள்.

பன்னிரண்டாம் சார்லஸ் மன்னன் போர் ஒன்றின்போது அணிந்திருந்த 'கோட்' அவன் ஏவலாளர்களால் பாதுகாத்துவைக்கப்பெற்றிருந்தது. பிறகு ஒருநாள் யாரோ ஒரு 'பழமை விரும்பி' அதை 561000 பிராங்குகள் கொடுத்து வாங்கிக்கொண்டான்.

அமியன்ஸ் ஒப்பந்தத்தில் கையெழுத்து இடப் பயன்பட்ட இரண்டு பேனுக்கள் 500 பவுன்களுக்கு விலைபோயின.

மேற்கு நாடுகளில் சென்ற நூற்றாண்டு வரையில் சுருள் சுருளான தலைமயிர் போன்ற தொரு தலையணி அணியும் பழக்கம் மிகுதியாக இருந்தது. செர்மன் நாட்டுத் தத்துவ அறிஞர் 'கண்ட்' என்பவர் பயன்படுத்தி வந்த அவ்வகைத் தலையணி ஒன்று அவர் இறந்த பின் ஏலத்தில் 200 பிராங்குகள் பெற்றது.

மோலியர் என்பவர் பிரஞ்சு நாட்டு நாடக ஆசிரியர்களுள் ஒருவராவர். இவர் வாழ்ந்தது சிறு கிராமம் ஒன்றில். மக்கள் வாழ்க்கையைப் படம் பிடித்துச் சொல்லும் நாடகாசிரியர் உலகத்தைக் காண, உண்மைகளை உணரப் பயன்படுத்திய இடம் ஒரு சிகை சிறைதக்கூடம் (சலூன்) சனிக்கிழமை தோறும் அந்தக் கூடத்திற்குச் சென்று மூலையில் போடப்பட்டிருக்கும் நாற்காலியில் அமர்ந்து விடுவாராம். ஊர்ச் செய்திகள் அங்கு அடிபட்டுத்தானே தீரும்? வெற்றிலை பாக்குக் கடை, சிகை சிறைதக்கூடம், தேநீர் இல்லம் இங்கு வராத செய்திகள் உண்டா? அந்த இடத்தில் இருந்துகொண்டே அறிய வேண்டியதை அறிந்து, சொல்ல வேண்டியதைப் பிறகு தன் நாடக வாயிலாகச் சொல்லுவது அவர் பழக்கம். அந்த நாடகாசிரியர் இறந்தபின்னர் அவர் பயன்படுத்திய நாற்காலி பாரிஸ் நகருக்குக் கொண்டுவரப்பட்டது. விற்பனையில் பெருந் தொகை விலையாகக் கிடைத்தது.

ஐரிஷ் நாட்டு மன்னன் பிரையின் போரு என்பவர் போரில் மாண்டபோது அவர் மகனுக்குக் கிடைத்த செல்வத்தில் 'ஹார்ப்' என்ற இசைக் கருவியும் ஒன்று. பல நாடுகள் சுற்றிப் பலர் கைமாறிய பின்னர் டப்ளின் நகரில் இருக்கும் கல்லூரி ஒன்றில் காட்சிப் பொருளாக இன்றும் அது இருந்து வருகின்றது.

இவற்றைப் போல் இன்னும் எத்தனையோ செய்திகளையும் நிகழ்ச்சிகளையும் வரலாற்று ஏடு காட்டும்.

நினைவுச் சின்னங்களாக, காட்சிப் பொருள்களாக எதையும் போற்றிக் காப்பதில் தீமை இல்லை. ஆனால் பழமை என்ற காரணத்திற்காக ஒன்றனை சமயத்துடன் தொடர்பு படுத்தி அதற்கு இல்லாத மெருகு இருப்பதாகக் கூறி, கண்டு செல்ல வேண்டியதைத் தொழுது செல்ல வேண்டும் என்பதில்தான் தவறு இருக்கிறது.

வியப்புணர்ச்சியினாலோ அருமை என்ற காரணத்தினாலோ பழமை பாதுகாக்கப்படுவதில் தவறு இல்லை. ஆனால் பழமை என்பதற்காகப் பாதுகாத்து, பாதுகாத்ததற்காகப் பாராட்டி, பாராட்டியதற்காக அதற்கு 'மகத்துவம்' கூறிடும் மடமைதான் அறியாமை ஆகும். அந்த அறியாமை இல்லாமல் பல்லும் பேனாவும் பெருந் தொகைக்கு விற்கப்படுவதில் என்ன கேடு இருக்கின்றது?

★

காஞ்சீபுரம், 95, திருக்கச்சிநம்பி தெரு "திராவிடநாடு" அச்சகத்தில்
... அச்சிடப்பட்டு வெளியிடப்படுகிறது.